# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு2029 வைகாசி28 (11-06-1998) வியாழக்கிழமை UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:176


## கிளைமோர் மீட்பு

மட்டக்களப்பு, ஜூன் 11

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி, பதுளை வீதியில் உள்ள கறுப்புப்பாலம் அருகில் கிளைமோர் கண்ணி ஒன்று மீட்கப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்டது.

இராணுவத்துக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து இது மீட்கப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## ஓட்டமாவடியில் கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு, ஜூன் 11

மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடியில் உள்ள மொகைதீன் ஜும்மா பள்ளிவாசலின் பிரதம நம்பிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் தமிழ் பகுதியிலிருந்து இராணுவம் வாபஸாக வேண்டும்

## ஜெயலலிதாவும், தோழமைக்கட்சி உறுப்பினரும் வாஜ்பாய்க்கு மகஜர்

சென்னை, ஜூன் 11

''இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய அரசாங்கம் அக்கறை செலுத்தவேண்டும் தமிழ்ப் பகுதிகளில் இருந்து இலங்கை இராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டும்''

மேற்கண்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜர் இந்தியப் பிரதமர் அடெல் பிஹாரி வாஜ்பாயிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

அ. தி. மு. க. செயலாளர் செல்வி ஜெயலலிதா, மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழ்நாட்டைச்சேர்ந்த 5 அமைச்சர்கள் மற்றும் அ. தி. மு. கவின் தோழமைக்கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த மகஜரில் கையெழுத்திட்டுள்ளனர்.

மகஜர் கையளிக்கப்பட்ட போது பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ், மறுமலர்ச்சி தி. மு. க. தலைவர் வை. கோபாலசாமி, ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி உட்பட தமிழகத்தில் இருந்து தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் உடனிருந்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் 12 நாள் சண்டையில்

# 5 அதிகாரிகள் உட்பட 208 படையினர் பலி!

## நாடாளுமன்றில் அனுருத்த தகவல்

கொழும்பு, ஜூன் 11

★ 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் மே 28 ஆம் திகதி முதல் ஜூன் 8 ஆம் திகதி வரையான கடந்த 12 நாள் சண்டையில் 5 அதிகாரிகள் உட்பட 208 படையினர் உயிரிழந்தனர்.

★ ஆறு அதிகாரிகள் உட்பட 212 படையினர் படுகாயம் அடைந்தனர்.

★ 55 அதிகாரிகள் உட்பட 1324 படையினர் சிறுகாயங்களுக்கு உள்ளானார்கள்.

★ இரு அதிகாரிகள் உட்பட 65 படையினரைக் காணவில்லை.

★ 225 விடுதலைப் புலிகள் உயிரிழந்ததாகவும், 600 பேர் காயம் அடைந்ததாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்தரத்வத்த மேற்கண்ட தகவல்களை நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தணிக்கை

யுத்தச்செய்திகளுக்கான தடை உத்தரவு காரணமாக பிரசுரத்துக்கு முன் அனுமதி பெறாத இராணுவச் செய்திகள் தவிர்க்கப்பட்டுள்ளன. (ஆ-ர்)

## யுத்த செய்தித் தடையை நீக்கக் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 11

அரசாங்கம் கொண்டு வந்துள்ள யுத்த செய்திகள் மீதான தடையை வாபஸ் பெறக் கோரி ஐ. தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் நேற்று குரல் எழுப்பினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மலையகத்தில் 14 தொழிற்சங்கங்கள் தொண்டா தலைமையில் முன்னணி

## மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட முடிவு

கொழும்பு, ஜூனி 11

14 மலையகத் தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய புதிய அரசியல் கூட்டு முன்னணி ஒன்று அமைச்சர் எஸ். தொண்டமான் தலைமையில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

இத்தகவலை இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர் பி. பி. தேவராஜ் நேற்று தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில் — தேசிய தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலுக்கு உள்ளான சாந்திக்குமார் மரணம்

கொழும்பு, ஜூன் 11

கடந்த திங்கட்கிழமை புறக்கோட்டை செ‌ன். ஜோன்ஸ் சந்தை அருகில் காரில் சென்று கொண்டிருந்த சமயம் கிரனேட் தாக்குதலுக்கு இலக்கான கொழும்பு வடக்கு உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் சபாரத்தினம் சாந்திக்குமார் நேற்றுக் காலை மரணமானார்.

கொழும்பு ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் உணர்வற்ற நிலையில் சிகிச்சை பெற்றுவந்த இவர் நேற்றுக் காலை மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரின் மரணம் தொடர்பாகப் பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-21-3)

## புலிகளின் மனு மீது இடைக்காலத் தீர்ப்பு

வாஷிங்டன், ஜூன் 11

அமெரிக்காவில் விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனு மீது வாஷிங்டன் நீதிமன்றத்தால் இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசமைப்பின் படி பேச்சு மற்றும் கூட்டம் நடத்தும் சுதந்திரம், தமது கொள்கைகளைப் பிரசாரம் செய்யும் சுதந்திரம் ஆகியன தமக்கு உண்டு என்று விடுதலைப் புலிகள் தாக்கல் செய்த மனுவை அந்த நீதிமன்றம் ஏற்று இடைக்காலத் தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொருள் உதவி பெறுவதற்கு அனுமதிக்க வேண்டும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சிவபாலனின் நியமனம் பற்றி கூட்டணி அறிவிப்பு

திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரனின் மரணத்தினால் வெற்றிடமாகியுள்ள யாழ். மாநகர முதல்வர் பதவிக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் சட்டத்தரணி பொ. சிவபாலனை நியமிப்பதாக கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

முதல்வர் பதவி நியமனம் தொடர்பான கடிதத்தை நேற்று யாழ். தேர்தல் தெரிவு அத்தாட்சி அலுவலருக்கு அவர் பக்ஸ்மூலம் அறிவித்துள்ளார்.

யாழ். தேர்தல் தெரிவு அத்தாட்சி அலுவலர் இரா. சம்பந்தனின் அறிவித்தலைத் தேர்தல் ஆணையாளருக்கு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அனுப்பி வைக்கவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (இ-7)

### யாழ். மாநகர சபை

## மற்றொரு உறுப்பினரும் பதவி விலகல் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். மாநகர சபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களில் மற்றும் ஒருவர் கடந்த 1 ஆம் திகதி முதல் பதவி விலகுவதாக நேற்று புதன்கிழமை அறிவித்துள்ளார்.

மாநகர சபையின் உறுப்பினராகிய வல்லிபுரம் பரமசிவம் என்பவரே பதவி விலகியுள்ளதாக அறிவித்துள்ளார்.

யாழ். மாநகர மேயர் திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரன் நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியில் உள்ள தமது வீட்டில் கடந்த மாதம் 17 ஆம் திகதி காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டபோது வ. பரமசிவமும் அங்கு இருந்ததும், காலில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்தினால் பலத்த காயமடைந்ததும் தெரிந்ததே.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி சின்னம்மா விநாயகமூர்த்தி**
(குங்கிலியம்)
(ஒய்வு பெற்ற ஆசிரியை, யா/ இணுவில் இந்துக்கல்லூரி)

பிறப்பு: **01 – 01 – 1933** இறப்பு: **12 – 05 – 1998**

அன்புள்ள அம்மாவே கொழும்புக்குச்
சென்று வருகிறேன் என்றீர்கள்!
சொன்னகதை மாறமுன்னர்
உயிரற்ற உடலெடுத்து வந்தீர்கள்!
யார் செய்த சதியோ விதியோ என்று
யாமிங்கே கலங்குகின்றோம்!

மக்கள், மருமக்கள், சகோதரர்,
மைத்துனர்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

(56774)

## மரண அறிவித்தல்

திருமதி
**பொன்மணி சுப்பையா**

சில்லாலை தெற்கைப் பிறப்பிடமாசவும், பண்ணாகம் பெரியதம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்மணி சுப்பையா அவர்கள் நேற்று (10-06-98) வவுனியாவில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் சின்னத்தம்பி சுப்பையாவின் அன்பு மனைவியும், தர்மகுலசிங்கம், அருளானந்தம், ம. நாகரட்ணம், காலஞ்சென்ற ஜெயானந்தன், ஜெ. வசந்தா, யோ. நகுலாம்பிகை, காலஞ்சென்ற கனகலிங்கம், திருக்குலசிங்கம், ஜெகதீஸ்வரன், சூரியகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், த. பராசக்தி, அ. இந்திராணி, செ. மகேந்திரன், ஜெ. சற்குணநாயகி, இ. ஜெயபாலசிங்கம், சி. யோகநாதன், ஜெ. தவலட்சுமி, சூ. சாந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற சுகேந்திரன், விஜயேந்திரன், கஜேந்திரன், அஜந்தன், நரேஸ்குமார், ரமேஸ்குமார், சுதர்சினி, சுதர்சன், அரவிந்தன், அஜந்தினி, துஷ்யந்தி, துஷ்யந்தன், கிருஷாந்தி, சஞ்சீவன், சிந்துயா, தாரணி, பிரதீபன், லஜீபன், சஜீபன், துவாகரன், ஜெனகரன், தர்சிகா, தனுசா, துஷாந்தி, சர்மிலா, சாமிலி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
இ. ஜெயபாலன்
(மருமகன்)

74/2, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(56782)

## மிருசுவில் பங்குடன் இணைப்பு

இதுவரை காலமும் தனித்து இயங்கிவந்த யாழ். கத்தோலிக்க திருச்சபையின் முகமாலைப் பங்கு மிருசுவில் பங்குடன் இணைக்கப்பட்டுள்ளது. (ஐ-171)

நெல்லியடி
**மஹாத்மா**
வெண் திரையில்
11 - 06 - 98 முதல்
அப்பாஸ் - கௌசல்யா
குஷ்பூ நடித்த
**ஜாலி**
காட்சிகள்:- 10-30, 2-30
( பழைய நேரப்படி )
(சி/3987)

**நாகம்ஸ்**
**சினிமா**
சுன்னாகம்.
11 - 06 - 98 வியாழன்
அகல வெண் திரையில்
ரஜனி - குஷ்பூ
ஜனகராஜ் நடித்த
**பாண்டியன்**
( CD வெளியீடு )
காட்சிகள்:- 10-30, 2-30
(56777)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்றும், நாளையும்
பிரசாந்த் - சங்கவி
கவுண்டமணி, செந்தில்
நடித்த
**மன்னவா**
சனி முதல் செவ்வாய்வரை
பழம் பெரும்
ரசிகர்களுக்கென
சிவாஜி- சறோஜாதேவி
ஜெமினி நடித்த
**பாலும் பழமும்**
நேரம்:- 10-00, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(56651)

**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
**பாட்ஷா**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
★ இயந்திரக் கோளாறு காரணமாக இன்றைய படக் காட்சி இடம்பெற மாட்டாது.
(சி/3971)

## மரண அறிவித்தல்கள்

### செல்வராசலிங்கம் பாலச்சந்திரன்

கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட செ. பாலச்சந்திரன் 09-06-98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி செல்வராசலிங்கம் தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னையா ஆகியோரின் மருமகனும், சந்திரலீலாவின் அன்புக் கணவரும், சோபனா, அனுஷா, அசோக், வினோத் (மாணவர்கள், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகநாதன், பஞ்சநாதன் (கொழும்பு), சந்திரபாலன் (அமெரிக்கா), நந்தகுமார் (கனடா), புஸ்பராணி (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும், யோகதாஸ், சாந்தகுமாரி, செல்வகுமாரி, மோகனதாசன் (கனடா), நந்தகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், சீதா, தவராசா, மகேஸ்வரன், சகுந்தலா (கனடா), சிறிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், மேனகா, ரேகா ஆகியோரின் மாமனாரும், லாவண்யா, லவன், தர்சிகா, தசாந், நிருஷா, மிதுஷா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-06-98 பகல் 1-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பா. சந்திரலீலா (மனைவி)

(55432)

### சபாரத்தினம் சாந்திக்குமார்

(உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்)

சபாரத்தினம் சாந்திக்குமார் அகாலமரணமானார்.

இவர் திரு. திருமதி சபாரத்தினம் (முன்னாள் கலால் ஆணையாளர்) ஆகியோரின் அன்பு மகனும், கிரிஜாவின் அன்புக் கணவரும், சௌமியபிரியா, சுபாங்கினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. திருமதி கனகரட்ணம் அவர்களின் அன்பு மருமகனும், சிவகுமார் (லண்டன்), சுபாஜினி (ஆஸ்திரேலியா), பிரேம்குமார் (லண்டன்), ராஜ்குமார் (சவூதி அரேபியா), சூரியகுமார் (சபா இம்பெக்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் மரணச்சடங்குகள் 13-06-98 சனிக்கிழமை இல. 15, குணானந்த மாவத்தை, கொழும்பு 13 இல் நடைபெறும்.

தகவல்:
சி. நகுலராஜா

186/22, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3992)

### கந்தையா நடேசபிள்ளை

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் பெருமாள்கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடேசபிள்ளை 01 — 06 — 1998 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் ராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செந்தூரம் மீரா (ஜேர்மனி), பகீரதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நீலாவதி (மட்டுவில்), தவமணி (புளியம்பொக்கணை) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற செல்வரட்ணம் (பாப்பா), கனகசுந்தரம் (கொழும்பு), பரமசிவம் (பாலாஜீ ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15 — 06 — 1998 அன்று ஜேர்மனியில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ. அருணாசலம்
(அதிபர்)

இல. 18, தாழையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

(56750)

### வினாசித்தம்பி ஆறுமுகம்

(Rtd. Junior Inspector Post Office, Jaffna)

வினாசித்தம்பி ஆறுமுகம் காலமாகிவிட்டார்.

இவர் யாழ். தபால் காரியாலய ஓய்வுபெற்ற கனிஷ்ட பரிசோதகரும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி சின்னம்மா ஆகியோரின் கனிஷ்ட புதல்வனும், யோகாம்பிகையின் அன்புக் கணவரும், திருமதி வள்ளிப்பிள்ளை பாலசிங்கம், திருமதி சந்திரவதனி சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரரும், சோதிலிங்கம் (முன்னாள் மாநகர சபை உறுப்பினர்), ரங்கநாதன் (லண்டன்), கிருபாகரன் (பிரான்ஸ்), கேசவநாதன் (லண்டன்), ரகுநாதன் (லண்டன்), கமலநாதன் (நோர்வே), உமாரஞ்சனி (லண்டன்), ஸ்ரீரஞ்சனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், விஜயலட்சுமி (கொழும்பு), பத்மாவதி (லண்டன்), நிர்மலா (பிரான்ஸ்), வினோதினி (லண்டன்), ஜெயா (லண்டன்), சுஜாத்தா (நோர்வே), கஜேந்திரன் (லண்டன்), பரதன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்,

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11-06-98) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 (புதிய நேரம்) மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
ஆ. சோதிலிங்கம்
(மகன்)

51, இலந்தக்குளம் வீதி,
அரியாலை.

(56778)

## கண்ணீர் அஞ்சலி

**நெருந்தீவு பல நோ. கூ. சங்கத்தில்**

கிளை முகாமையாளராகவும் பொது முகாமையாளராகவும் பணியாற்றியவரும்
வேலணை உதவி அரசாங்க அதிபர்

**ஜே. எக்ஸ். செல்வநாயகம், ஜே. தவராசா (ஆசிரியர்)**

ஆகியோரது அன்புத் தந்தையுமான

**சவிரிமுத்து யோசெப்**

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
இயக்குநர் சபை, பொதுச் சபை உறுப்பினர்கள்,
பணியாளர்கள்.

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம்,
நெடுந்தீவு.

(சி/3989)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் [illegible] நூலகம்

# நைஜீரிய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் சானி அபாச்சா மறைவு

## அவரது இடத்துக்கு ஜெனரல் அபூபக்கர்

(லாகோஸ், ஜூன் 11

நைஜீரியாவின் இராணுவ அரசுத் தலைவர் ஜெனரல் சானி அபாச்சா (SANI ABACHA) திங்களன்று மரணமானார்.

சில நாள்களாக சுகயீனமுற்றிருந்த அவர் மாரடைப்பால் இறந்ததாக அறிவிக்கப்பட்டது.

அபாச்சாவின் மறைவை அடுத்து அவரது இடத்துக்கு மூத்த பாதுகாப்புத் துறைத் தலைவர் ஜெனரல் அப்துசலாம் அபூபக்கர் (ABDUSALAM ABUBAKAR) செவ்வாயன்று பதவியேற்றார்.

அபாச்சாவின் மரணச் செய்தியை அவரது உறவினர்களை மேற்கோள் காட்டி சீ. என். என். தொலைக்காட்சியே முதலில் அறிவித்தது. கடந்த சில தினங்களாக அவர் சுகயீனமடைந்திருந்ததாக அறிக்கைகள் தெரிவித்தன. அதனால் தலைநகர் லாவோசில் உள்ள அபாச்சாவின் வாசஸ்தலத்துக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது.

1983 ஆம் ஆண்டு முதல் இராணுவ ஆட்சியின் கீழ் இருந்து வரும் நைஜீரியாவில் 1993 இல் ஏற்பட்ட அரசியல் குழப்பம் கரரணமாக அப்போது நடந்த ஜனாதிபதித் தேர்தலை வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் இராணுவ அரசு ரத்துச்செய்தது. அதனைத் தொடர்ந்து ஜெனரல் அபாச்சா பதவிக்கு வந்தார்.

அபாச்சாவின் ஆட்சியில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுவருவதாக அமெரிக்கா உட்பட பல அமைப்புக்கள் குற்றஞ்சாட்டிவந்தன.

இதனால் நைஜீரியா பொதுநலவாய அமைப்பில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டது. நைஜீரியாவை இராணுவ ஆட்சியில் இருந்து ஜனநாயக வழிக்கு மீட்கப்போவதாக அபாச்சாகடந்த மாதம் உறுதியளித்திருந்தார்.

எதிர் வரும் ஓகஸ்ட்டில் நடை பெற இருந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் அபாச்சாவும் போட்டியிட இருந்தார்.

அரசினால் தடைசெய்யப்பட்ட 5எதிர்க்கட்சிகள்தமது சார்பில் ஜெனரல் அபாச்சாவையே ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்திருந்தன.

புதிதாக அதிகாரத்துக்கு வந்துள்ள ஜெனரல் அபூபக்கர் நைஜீரியாவில் இராணுவ ஆட்சியை முடிவுக்குக்கொண்டு வந்து ஜனநாயக ரீதியான தேர்தல்களை நடத்த வேண்டும் என்று அவர் மீது அமெரிக்கா அழுத்தம் கொடுத்துள்ளது.

அபாச்சாவின் மறைவுக்கு நாடெங்கும் ஒருவார காலத்துக்கு துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்று ஜெனரல் அபூபக்கர் அறிவித்துள்ளார். (ஐ)

## குஜராத்தில் கடும் புயல் 200க்குமேற்பட்டோர்பலி

புதுடில்லி, ஜூன் 11

இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் கரையோரப் பகுதியை நேற்று முன்தினம் தாக்கிய கடும் புயலினால் 200-க்கும் மேற்பட்டோர்பலியாகி விட்டதாக அஞ்சப் படுகிறது.

புயல் தாக்கிய பகுதிகளில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட சடலங்கள் மீட்கப் பட்டிருக்கின்றன.

150 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய புயலினால் பல குடியிருப்புப் பகுதிகள் அடித்துச் செல்லப்பட்டன.

போக்குவரத்து, தொலைத்தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டன. பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம் பெயர்ந்தனர்.

உதவி மீட்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அனர்த்தத்தில் பலியானோரின் எண்ணிக்கை நூற்றுக் கணக்கில் அதிகரிக்கலாம் என்று எதிர் பார்க்கப்பட்டது. (ஐ-8)

## இம்மாதம் 27, 28 இல் பிரான்ஸில் இந்துமாநாடு

பாரிஸ், ஜூன் 11

இந்துக்களின் பண்பாட்டையும், வாழ்க்கை முறைமையையும் மேம்படுத்துவதற்காகவும், சர்வதேச ரீதியில் இந்துக்கள் மத்தியில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்காகவும்இந்துமாநாடு ஒன்று எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் பிரான்ஸில்நடைபெற உள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட இரு இலக்குகளையும் மையமாகக் கொண்டு எதிர்கால நிகழ்ச்சி நிரலை இனங்காண்பதற்காக உலகின் அனைத்துப் பாகங்களில் இருந்தும் பிரதிநிதிகள் இம்மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்துக்களின் வாழ்க்கை முறை ஒருமைப்பாடு பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் ஆர்வலர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

பாரிஸ் இராமலிங்கர் பணி மன்றம், பிரான்ஸ் குஜராத் இந்து சமாஜ், பிரான்ஸ் சிவன் ஆலயம், பிரான்கோ மொரிசியன் சங்கம், விநாயகர் பக்தர்கள் சங்கம், பிரான்ஸ் இந்து மக்கள் சங்கம் ஆகியவை கூட்டாச் இணைந்து இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளைக செய்துள்ளன, (ஐ-9)

## ஐ. நா. செயலர் நம்பிக்கை

ஐ. நா. ஜூன் 11

நைஜீரியாவின் சக்தி மிக்க தலைவர் சானி அபாச்சாவின் மரணத்தைத் தொடர்ந்து அந்நாட்டில் ஜனநாயக ஆட்சிமுறை ஏற்படும் என ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நைஜீரிய அரசாங்கத்துக்கும், ஜெனரல் அபாச்சாவின் குடும்பத்தினருக்கும் அவர் தமது அனுதாபச் செய்தியை அனுப்பியுள்ளார். (ஐ)

## யுத்தத்துக்கு தயார்!

எதியோப்பியாவுககும், எதித்திரியாவுக்கு மிடையே எல்லைப்பகுதி தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சை காரணமாக இம்மாதம் 5 ஆம் திகதி முதல் இரு நாடுகளும் பிரகடனம் செய்யாத யுத்தத்தில் இறங்கியுள்ளன.

## நூற்றாண்டின் இறுதிப்போட்டி

பாரிஸ், ஜூன் 11

பாரிஸில் ஆரம்பமாகியுள்ள உலக உதை பந்தாட்டப் போட்டித் தொடர் இந்த நூற்றாண்டில் நடக்கும் இறுதிப் போட்டி ஆகும்.

1930 ஆம் ஆண்டுமுதல் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வரும் இப்போட்டி இனி 2ஆயிரத்து 2ஆம் ஆண்டு நடைபெறும். ஜப்பானும், கொரியாவும் கூட்டாக இணைந்து இப்போட்டியை நடத்துகின்றன.

1942 ஆம் ஆண்டிலும் 1946 ஆம் ஆண்டிலும் உலகப் போர்காரணமாக இப்போட்டிகள் நடைபெறவில்லை. மற்றப்படி இப்போட்டி தடையின்றி நடைபெற்று வந்துள்ளது.

### உலக அரங்கில்

இம்முறை இந்தப் போட்டியை நடத்துவதற்கு பிரான்ஸ் 16 ஆயிரம் கோடி ரூபாவை செலவிட்டுள்ளது.

பிரான்ஸில் உள்ள 10 நகரங்களில் இப்போட்டியை நடத்த ஸ்ரேடியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ஐ)

## பிறேசிலின் நம்பிக்கை நட்சத்திரம்

உலக உதைபந்தாட்டப் போட்டியின் நாயகனாக இம்முறையும் பிறேசில்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## உலக உதைபந்தாட்ட விழா

# விமானிகள் வேலை நிறுத்தம் முடிவு

# பாரிஸ் நகரில் தெருக்களியாட்டங்கள்!

## வன்செயல்களை கட்டுப்படுத்தபொலீஸ்திண்டாட்டம்!!

பாரிஸ், ஜூன் 11

பிரான்ஸில் "எயர் பிரான்ஸ்' விமான நிறுவன விமானிகள் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் உடன்பாடு ஒன்று எட்டப்பட்டதை அடுத்து நேற்று உலகக் கிண்ண உதை பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாவதற்குச் சில மணி நேரம் முன்பாக முடிவுக்கு வந்தது.

உலக உதைபந்தாட்ட விழாவைக் கண்டுகளிக்க உலகின் பல பகுதிகளிலும் இருந்து வந்து குவிந்த ரசிகர்கள் பாரிஸ் நகரத் தெருக்களில் நேற்று முழுவதும் தெருக்களியாட்டங்களில் (ROAD PARTY) ஈடுபட்டனர். ஆங்காங்கே வன் செயல்களில் இறங்கிய ரசிகர் கூட்டங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் பிரான்ஸ் பொலீஸார் திண்டாடினர்.

ஆர்ப்பரித்து கட்டுப்பாடுகளை மீறிய ரசிகர் கூட்டத்தை அடக்க பொலீஸார் முயற்சித்த போது ஆத்திரமடைந்த ரசிகர்கள் நடத்திய தாக்குதலில் 15 பொலீஸார் வரை காயமடைந்தனர்.

32 அணிகள் பங்குபற்றும் உலக உதைபந்தாட்டப் போட்டிகள் இலங்கை நேரப்படி நேற்றிரவு கோலாகலமாக ஆரம்பமாக இருந்தன. தொடர்ந்து ஒருமாத காலம் நடைபெறும் இப்போட்டிகளின் இறுதி ஆட்டம் ஜூலை 12 ஆம் திகதி இடம் பெறும்.

நான்கு முறை உலகக் கிண்ணத்தை வென்ற பிறேசில் அணியும் ஸ்கொட்லாந்து அணியும் முதல் நாள் ஆட்டத்தில் மோதவுள்ளன.

பிறேசில், பிரான்ஸ், ஆர்ஜென்ரீனா, இத்தாலி, ஜேர்மனி, ஹொலன்ட் ஆகிய அணிகளில் ஒன்று இம்முறை வெற்றி வாகை சூடிக் கொள்ளலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. சில வேளைகளில் இந்த நாடுகளைப் பின் தள்ளி விட்டு இங்கிலாந்து, டென்மார்க், நைஜீரியா ஆகிய நாடுகளில் ஒன்று வெற்றியீட்ட வாய்ப்புண்டு.

32 அணிகளைச் சேர்ந்த சுமார் 700 உதை பந்தாட்ட வீரர்கள் பாரிஸில் ஏற்கனவே முகாமிட்டுள்ளனர்.

'பிரான்ஸ் —98' எனப்படும் இந்த மாபெரும் உலக விழா பயங்கரவாத தாக்குதல்களுக்கு இலக்காகலாம் என எச்சரிக்கப்பட்டதை அடுத்து இது தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளை பிரான்ஸ் அதிகாரிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

## தென்னாசியாவில் இருந்து ஓர் அணியும் இல்லை!

லண்டன், ஜூன் 11

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலகக் கிண்ண உதை பந்தாட்டப் போட்டிகளில் இம் முறையும் தென்னாசிய நாடுகளில் இருந்து எந்த ஓர் அணியும் இடம்பெறவில்லை.

கிரிக்கெட் விளையாட்டில் உலகப் புகழ் பெற்ற தென்னாசிய நாடுகளில் உலகத் தகுதி பெற்ற உதைபந்தாட்ட அணிகள் உருவாகாதது விளையாட்டு ஆர்வலர்களிடையே ஆச்சரியத்தையும், கவலையையும் உருவாக்கியுள்ளது.

இம் முறை நடைபெறும் போட்டிகளில் ஆசியாவில் இருந்து தென்கொரியா, ஜப்பான் சவுதி அரேபியா, ஈரான் ஆகிய நான்கு நாடுகள் கலந்து கொள்கின்றன.

எதிர்வரும் 2 ஆயிரத்து 2 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள அடுத்த உலகக் கிண்ண உதை பந்தாட்டப் போட்டியிலாவது தென்னாசிய அணி ஒன்று பங்குபற்றுமா என்பது ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. (ஐ)

## தொலைக்காட்சிகளின் முன் லட்சக் கணக்கானோர்!

பாரிஸ், ஜூன் 11

பாரிஸில் நேற்றிரவு ஆரம்பமான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியைக் கண்டுகளிக்க உலகெங்கும் பல லட்சக்கணக்கான ரசிகர்கள் தொலைக்காட்சிப் பெட்டி

(9 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பக் கல்லூரி கிளிநொச்சியில் அமையும்?

அரியாலை, ஜூன் 11 கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவட்ட கல்விப்பணிப்பாளர், உதவி அரச அதிபர்கள், திட்டப்பணிப்பாளர்கள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொண்ட கல்விக்குழுக் கூட்டத்தில் தொழில் நுட்ப பயிற்சி நெறி சம்பந்தமாக ஆராயப்பட்டுள்ளது.

வன்னியில் உள்ள நான்கு மாவட்டங்களிலும் தொழில் நுட்ப பயிற்சி நிலையம் எதுவும் இதுவரை ஆரம்பிக்கப் படவில்லை.

இதனால் பாடசாலைகளை விட்டு விலகும் மாணவர்கள் தொழில்நுட்பக் கல்வி வசதிகளைப்பெற முடியாதுள்ளது.

ஆகவே இம் மாவட்டங்களில் தொழில் நுட்பபயிற்சி நிறுவனம் ஒன்றை அமைப்பது அவசியம் என்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ-17)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 11 — 08 — 1948 | 11 — 05 — 1998 |

**திருமதி தேவதாஸ் மரியலீலா (பொன்மணி)**

நீளும் நினைவுகள் நெஞ்சில் நிழலாக
நாளும் வந்து நம்மை வாட்டுதம்மா
பாசத்தை ஊட்டி வளர்த்தவளே!
என்றினிக் காண்போம் உள்ளம் உருகுதம்மா?

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
உறவினர்.

சென். அன்ரனிஸ் லேன்,
பண்டத்தரிப்பு

(56769)

## நீங்காத நினைவில் ஐந்தாம் வருடம்



**N. பொன்னையா தம்பையா**

அன்னை மடியில் 05-07-1927

ஆண்டவன் அடியில் 06-06-1993

திதி 11-06-1998

ஐந்து ஆண்டுகளும் எப்படிச் சென்றதப்பாவே!
காலனது கணக்கு ஏட்டில்
பதிவுதான் முந்தியது போல்
கண்ணில் தெரியும் உங்கள் உருவம்
கண்ணீரைத்தான் வரவழைக்கின்றது!
விதி இதுதான் எனத் தெரிகிறது.
ஆனாலும் மனம் பேதலிக்கின்றது ஏன்?
மீண்டும் ஒரு முறை எங்கள் அப்பாவே!
விரைந்து வாரீரோ எங்களைப் பார்ப்பதற்கு.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் நினைவால் துயருறும்:
அன்பும், பாசமுங் கொண்ட
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரக்குழந்தைகள்.
உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்:
ஜோன்தம்பையா
(மகன் - கனடா)

ஆனந்தா ஸ்ரோர்ஸ்,
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

(56767)

## மருந்துகள் வந்தன

நெல்லியடி ஜூன் 11 பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கு, பெண்களுக்கான குடும்பக் கட்டுப்பாட்டு ஊசி மருந்துகள், வில்லைகள் போன்றவைகளை யாழ். பிராந்திய சுகாதாரப் பணிமனையினர் அனுப்பி வைத்துள்ளனர்.

(ஐ-109)

## பௌத்தசின்னங்கள் மாங்குளத்தில்

கொழும்பு, ஜூன் 11 மாங்குளம் பகுதியில் மிகப் பழமை வாய்ந்த புத்தர் சிலையும் பௌத்த ஆலயச் சிதைவுகளும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாக ரூபவாஹினி தெரிவித்தது.

'வெற்றி உறுதி' படை நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் இவற்றைக்கண்டு பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கற்றூண்கள், தூபிகள், சந்திரவட்டக்கல்லின் பாகங்கள் ஆகியன கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும்—

இச் சிதைவுகள் இராஜ மகாவிகாரையின் சிதைகள் என நம்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாங்குளத்தில் உள்ள ஓர் ஓடைக்கருகில் இந்தச் சிதைவுகள் கண்டெடுக்கப்பட்டதாகவும், இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட சிதைவுகள் இப்பகுதியில் பௌத்த ஆலயங்களும் விகாரைகளும் இருந்தன என்பதை நிரூபிப்பனவாக உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)

## விவசாயப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூன் 11 திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி குறுங் காலவிவசாயப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுமார் ஐம்பது மாணவர்களுக்கு மேல் இந் நெறிக்காக விண்ணப்பித்துள்ள போதிலும் நாற்பது மாணவர்களுக்கு மேல் அனுமதிக்க முடியாத நிலையுள்ளதாகவும் —

இப்பயிற்சி நெறியின் பின் மற்றொரு தொகுதிக்கு விண்ணப்பம் கோரப்படுமெனவும் [illegible] பயிற்சி நிலைய அதிகாரி தெரிவித்தார்.

(ஐ-ரி)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்திய

## நாட்டுக் கூத்து இசை நாடகப் போட்டி முடிவுகள்

### பொது மன்றங்கள்

### காத்தவராயன் கூத்து

1ஆம் பரிசு 5000/-
கைதடி வளர்மதி நாடகமன்றம், கைதடி மத்தி.

2ஆம் பரிசு 3000/-
கற்கோவளம் வேணுகானசபை நாடக மன்றம், பருத்தித்துறை.

3ஆம் பரிசு 1500/-
அண்ணாசிலையடி கரணவாய் இளங்கலைஞர் மன்றம், கரவெட்டி.

கௌரவ பரிசு 1000/-
★ சமரபாகு (நியூட்டன்) கலாமன்றம், வல்வெட்டித்துறை.
★ பம்பல் நாடக மன்றம், ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.
★ காங்கேசன்துறை வசந்தகான சபா, அரியாலை.

### இசை நாடகம்

1ஆம் பரிசு 5000/-
மயான காண்டம் - இரத்தினகுமார் குழுவினர், பளை.

2ஆம் பரிசு 3000/-
அரிச்சந்திர மயான காண்டம் - தைரியநாதன் குழுவினர், யாழ்ப்பாணம்.

3ஆம் பரிசு 1500/-
பூதத்தம்பி - நடிகமணி கலாமன்றம், சுன்னாகம்.

கௌரவ பரிசு 1000/-
★ காங்கேசன்துறை - வசந்தகான சபை, அரியாலை.
★ பக்த நந்தனார் - இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை.
★ நல்லதங்காள் - வேலாயுதம்குழுவினர், கரவெட்டி.

### நாட்டுக்கூத்து (ஆட்டக்கூத்து)

1ஆம் பரிசு 5000/-
ஆரணியத்தில் அடல்செறி வீமனும் விஜயனும் -ட்டுக்கோட்டை நாட்டுக் கூத்து, அபிவிருத்திக்குழு

2ஆம் பரிசு 3000/-
குசலவன் - பத்மா கலாமன்றம், அரியாலை.

### ஏனைய கூத்துக்கள் - பொது

1ஆம் பரிசு 5000/- (இரண்டு)
★ முத்தா மாணிக்கமா - வளர்பிறை நாடக மன்றம், பாசையூர்
★ கண்டியரசன் - வ. அல்பிரட், அண்ணாவியார் குழு, பாசையூர்

3ஆம் பரிசு 1500/-
நொண்டி நாடகம் - சென். றோக் வளர்மதி கலையகம், குருநகர்.

கௌரவ பரிசு 1000/-
பவளக்கொடி - நா. சின்னத்துரை அண்ணாவியார்குழு, அரியாலை.

### பாடசாலை ரீதியில்

1ஆம் பரிசு 1250/-
யா/செங்குந்தா இந்துக்கல்லூரி, கல்வியங்காடு.

2ஆம் பரிசு 1000/-
யா/கொழும்புத்துறை இந்து ம. ம. வி.

3ஆம் பரிசு 750/-
யா/ஸ்ரீபார்வதி வித்தி, அரியாலை.

### இசை நாடகம்

1ஆம் பரிசு 1250/-
சத்தியவான், சாவித்திரி - யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்.

2ஆம் பரிசு 1000/-
சத்திய வேள்வி - யா/புனித மரியாள் வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

3ஆம் பரிசு 750/-
விசுவாமித்திரர் சபதம் - யா/கொழும்புத்துறை இந்து ம. வி;

### நாட்டுக் கூத்து

1ஆம் பரிசு 1250/-
மனுநீதிச் சோழன் - யாழ். சென். றோக்ஸ் வித்தியாலயம், குருநகர்.

2ஆம் பரிசு 1000/-
வீரத்தளபதி - யா/ பாசையூர் சென். அன்ரனிஸ் றோ. க. பாடசாலை.

3ஆம் பரிசு
வேளாங்கண்ணியே - யா/நாவாந்துறை றோ. க. த. பாடசாலை.

இவற்றுடன் இப்போட்டிகளில் கலந்து கொண்ட 34 பொதுமன்றங்கள் பாடசாலைகளுக்கும், தலா 2500/- வீதம் ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

மேற்படி பரிசில்கள், நடக்கவிருக்கும் பரிசளிப்பு விழாவின்போது வழங்கப்படும் என்பதையும், பரிசளிப்பு விழாவின்போது சிறந்த நாடகங்களுக்கான பத்திரம் வழங்கப்படும் என்பதையும், பரிசளிப்பு விழா திகதி ஒவ்வொரு மன்றத்திற்கும் பின்பு அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செ. மெற்றாஸ் மயில்
செயலாளர்,
பாரம்பரிய கலைகள்
மேம்பாட்டுக் கழகம்.

(56773)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 மாகாண சபைகளுக்கும் ஜே.வி.பி.வேட்பாளர் தெரிவு

கொழும்பு, ஜூன் 11
மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட 5 மாகாண சபைகளுக்கான முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளர்களை ஜே. வி. பி. தெரிவு செய்துள்ளது.

ஜே. வி. பி.யின் அரசியல் குழு அண்மையில் கூடி இறுதி முடிவை எடுத்துள்ளது.

இதன்படி மேல் மாகாண சபையின் முதன்மை வேட்பாளராக ஜே. வி. பியின் பிரச்சார செயலாளர் விமல் வீரவங்ஸவும் —

சப்பிரகமுவ மாகாண சபையின் முதன்மை வேட்பாளராக சம்பஹகா பிரதேச சபை உறுப்பினரான அஜித்குமாரவும் —

ஊவாமாகாண சபையின் முதன்மை வேட்பாளராக அனைத்துப் பல்கலைக்கழகங்களின் மாணவர் பேரவையின் முன்னாள் அமைப்பாளரும் பொறியியல் பட்டதாரியுமான றோஹித திலகரத்னவும் —

வடமத்திய மாகாண சபையின் முதன்மை வேட்பாளராக சமாஜவாதி தொழிற் சங்கத்தின் தேதிய அமைப்பாளரான எம். டி. லால் காந்தவும் —

மத்திய மாகாண சபையின் முதன்மை வேட்பாளராக சமாஜவாதி மாணவர் சங்கத்தின்தேசிய அமைப்பாளர் விமல் ரத்நாயகவும் போட்டியிடவுள்ளனர்.

(ஐ-10)

ஆயுள்வேத வைத்தியசாலைக்கு

## சிபார்சுக்கு இணங்கவே மருந்து கொள்வனவு

யாழ்ப்பாணம், ஜூன் 11
சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட இலவச ஆயுள்வேத வைத்திய சாலைகளுக்கு மருத்துவ உத்தியோகத்தர்களின் சிபார்சின் படியே மருந்து கொள்வனவு செய்யப் பட வேண்டும்.

சாவகச்சேரி பிரதேச ஆயுள்வேத வைத்திய சாலைகளில் கடமையாற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடலில் இவ்வாறு தீர்மானிக்கப் பட்டது.

இக்கலந்துரையடால் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் பொ. அன்ரன் தலைமையில்நடைபெற்றது.

சபையினால் மூலிகைத் தோட்டம் ஒன்று அமைக்கப் பட்டு பராமரிக்கப்படவேண்டும் என்று —

வடக்கு—கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தினால் ஒரு நோயாளிக்கு 2 ரூபா வீதமே மருந்திற்கான பணம் மீளளிக்கப்படுகிறது. இதனை அதிகரித்து வழங்கும்படி கோருவதெனவும்—

நோயாளிகளுக்கு தரமான மருந்து வழங்கப்பட வேண்டும் எனவும்—

கலந்துரையாடலில் மேலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(ஐ-5)

மாமுனை அ.த.க.பாடசாலை:

## ஆண்டு 8 வரை வகுப்புகள் ஆரம்பிக்கக் கோரிக்கை

செம்பியன்பற்று, ஜூன் 10
வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கல்விக்கோட்டத்தில் உள்ள மாமுனை அ.த.க. பாடசாலையில் மீளவும் ஆண்டு 8 வரை வகுப்புக்களை ஆரம்பிக்குமாறு மாமுனை கலைமகள் சனசமூக நிலையமும், மீனவர் சங்கமும் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆண்டு 5 வரையுமே வகுப்புக்கள் நடைபெற்று வருவதால் இப்பகுதியில் உள்ள மாணவர்கள் செம்பியன் பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு கால் நடையாகவும் சைக்கிள்களிலும் சென்று தமது கல்வியைக் கற்று வருகின்றனர்.

தற்போது இப்பகுதிக்கு வன்னிப்பகுதியில் இருந்து பெருமளவான மக்கள் வருகை தந்துள்ளதாலும் மாணவர் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்துள்ளதாலும்மீளவும் வகுப்புகளை ஆரம்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(இ-36)

## பல்கலை மாணவர் இரத்ததானம்

யாழ்ப்பாணம், ஜூன் 11
கடந்த 31 ஆம் திகதி பரிசுத்த ஆவியானவரின் திருநாளன்று யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த அருட்திரு. சூசைநாதன் அடிகளார் உட்பட 25 மாணவ மாணவியர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இரத்த தானம் செய்துள்ளனர்.

அன்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமகள் சிவசங்கர் தலைமையிலான ஊழியர்கள் பல்கலைக் கழகம் சென்று இரத்தத்தைப் பெற்றதுடன், இம் முன்மாதிரியான செயற்பாட்டைப் பாராட்டி சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு நன்றியும் தெரிவித்துள்ளனர்.

(ஐ-8)

## உடைந்த நிலையில் வந்த 'றோணியோ' இயந்திரம்!

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ்ப்பாண மாவட்ட உற்பத்தி சந்தைப்படுத்தல், நுகர்ச்சி கூட்டுறவுச் சங்க தலைமைக்காரியாலயத்திற்கென கொழும்பிலிருந்து 'மேர்ச் ஹண்டி' கப்பல் மூலமாக எடுத்து வரப்பட்ட 'றோணியோ' இயந்திரம் உடைந்த நிலையில் வந்து சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி யாழ். மாவட்ட அரச அதிபருக்கு, வட மாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபைக்கும் தாம் முறைப்பாடு செய்துள்ளதாக மேற்படி சங்கத் தலைவர் சீ. வி. கே. சிவஞானம் தெரிவித்தார்.

கப்பலிலிருந்தபோது றோணியோ இயந்திரம் உடையவில்லை. இறக்கும் பணியின் போதே உடைந்திருக்க வேண்டும் எனவும் இனி இவ்வாறு நடக்காமல் பொருள்களை பத்திரமாக எடுத்து வருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த இயந்திரம் தற்பொழுது எந்த வகையிலும் பயன்படுத்த முடியாத அளவுக்கு உடைந்துள்ளது.

தனியார் துறையாயின் நட்டங்கள் ஈடு செய்யப்படலாம் ஆனால் கூட்டுறவுத்துறையினரால் இழப்புக்களை ஈடு செய்யமுடியாது. எனவே இது பற்றி தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென நான் அரச அதிபரை கடிதம் மூலம் கேட்டுள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.

(இ-ரி)

## நீர் விநியோகம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ். போதனா வைத்திய சாலையில், நோயாளர், பொதுமக்கள் மற்றும் ஊழியர்களின் நலன் கருதி ஜேர்மன் தொண்டு நிறுவனத்தால் (ஜீ. ரீ. இசற்) அளிக்கப்பட்டு வந்த குடிதண்ணீர் விநியோகம் நேற்று முன் தினம் முதல் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

தண்ணீரை நிரப்புவதற்காக அங்கே அமைக்கப்பட்டிருந்த தண்ணீர்த்தாங்கி சேதமடைந்திருப்பதனாலேயே, தாங்கியில் தண்ணீர் நிரப்ப முடியாத நிலையால் இத்தற்காலிக இடைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தண்ணீர்த் தாங்கியின் அடிப்பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

## ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளத் தயார்!

### ஐ.தே.க வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஜூன் 11
ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசாங்கம் முடிவு செய்தால் ஐ. தே. க. வின் சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

தெற்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்த ஆயத்தங்கள் செய்யப்படுவதாக செய்திகள் வெளிவரும் அதே நேரத்தில் அதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசு முயலக் கூடும் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அவ்வாறுஜனாதிபதித்தேர்தல் நடந்தால் ஐ. தே. க. அதில் போட்டியிடத் தயாராகவிருப்பதாகவும்—

ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரம சிங்காவை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டது.

## சுன்னாகத்தை நவீன பட்டினமாக்க மக்கள்,வர்த்தகர் ஒத்துழைப்பு தேவை

### வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர்

வலிகாமம் தெற்கு, ஜூன் 11
சுன்னாகம் பட்டினத்தை ஒரு நவீன பட்டினமாகக் கொண்டு வரவும், ஏனைய கிராமங்கள் தமது பழைய நிலைகளை அடையவும் நான் மேற் கொள்ளும் முயற்சிகளுக்கு பொதுமக்களும், வர்த்தகர்களும் தமது பூரண ஒத்துழைப்பைத் தர வேண்டும்.

இவ்வாறு சுன்னாகம் சந்தை மைதானத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் பதிலுரை வழங்கிய வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி. மா. செல்வராசா கூறினார்.

செல்வராசாவின் 50 வருட மக்கள்சேவையைப்பாராட்டியும் அவரது 70 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் முகமாகவும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையினராலும், பொது மக்களாலும், வர்த்தகர்களாலும் ஒழுங்கு செய்யப்பட்ட வரவேற்பு விழா சுன்னாகம் மத்திய சந்தை மைதானத்தில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தலைமை வகித்தார்.

பிரதேசசபைத்தலைவரும், அவரது பாரியாரும் அவர்களின் வீட்டில் இருந்து மங்கள வாத்தியங்களுடன் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

பிரதேசசபைத் தலைவர் தமதுஉரையில்மேலும் கூறியதாவது:-

ஜனநாயக வழியில் நம்பிக்கைகொண்டமக்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது எமது கடமை.

மக்களுக்கு வேண்டிய உணவு, உடை, உறைவிட வசதிகள் உடனடியாக பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். மக்களின் சிறப்பான வாழ்க்கைக்கு தொலைபேசி வசதி, வீதித் திறப்பு, ஒழுங்கான போக்குவரத்து சாதனம் போன்றவை சீராக அமைய வேண்டும். இவற்றை நிறைவேற்ற எனக்கு மக்களின் ஒத்துழைப்புத் தேவை.

பல அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தத் திட்டம் இட்டுள்ளேன்.

எம்மிடையே உள்ள ஒற்றுமையின்மையே எம்மைப் பெரிதும் பாதிக்கின்றது. சேர, சோழ, பாண்டியர் காலம்முதல் தமிழரைப்பிரித்தாளும் நிலையே நிகழ்ந்து வந்துள்ளது. எமது தொகுதி பா. உ. திரு. வி. தர்மலிங்கம் கொல்லப்பட்டதிலிருந்தே நாம் ஒரு குடையின் கீழ் ஒற்றுமையாக இயங்குவோம் என கேட்டு வருகின்றேன். அதிகாரவெறி எம்மை ஒற்றுமைப்பட வைக்க விடவில்லை.

மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களின் ஜனநாயக அரசியலைத் துப்பாக்கியால் அழித்து விட முடியாது. நிர்வாகத்தில் சர்வாதிகாரம், அராஜகம் போன்றவற்றுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

மரணத்தைக் கண்டு பயப்படக் கூடாது. ஒரு முறை தான் நான் இறப்பேன். அது மக்களுக்காக சேவையாற்றிய மன நிம்மதியுடனாக இருக்கவேண்டும்— என்றார்.

உங்களால்தெரிவு செய்யப்பட்ட நான் உங்கள் தேவைகளை நிறைவு செய்ய உங்களின் ஒத்துழைப்பையே நாடி நிற்கிறேன்.

இப்படி அவர் கூறினார்.

உடுவில் கல்விக் கோட்ட கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி, அதிபர் சு. துரைசிங்கம் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர்.

திரு. செல்வராசாவுக்கு மாவை ஆதீன கர்த்தா மகாராஜ ஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

(அ-152)

## நல்லூர் பிரதேச சபைக்கு 3 திட்டங்களுக்கு நிதி

யாழ்ப்பாணம், ஜூன் 10
இந்த வருடத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபையின் கீழ் உள்ள 3 திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் மத்திய சன சமூக நிலையத்தைப் புனரமைக்க 75 ஆயிரம் ரூபாவும் —

நல்லூர் வடக்கு கலைமகள் சனசமூக நிலையத்தைப் புனரமைக்க 25 ஆயிரம் ரூபாவும் —

நல்லூர் வடக்கு விநாயகர் விளையாட்டுக் கழகத்துக்கு முன்னால் உள்ள பாதுகாப்பு அணையை அகற்றுவதற்கு 20 ஆயிரம் ரூபாவும்—ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இன்னும் பல்வேறு திட்டங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளதாக நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்தார்.

(இ-7)

## பாடசாலைகளின் ஊடாக மாணவர்களுக்கு அ. அட்டை

கொழும்பு, ஜூன் 10
16 வயதைப் பூர்த்தி செய்த பாடசாலை மாணவர்கள் அனைவரும் பாடசாலைகள் ஊடாக தேசிய அடையாள அட்டைகள் வழங்கும் புதிய திட்டத்தை நடைமுறைப் படுத்துவதென ஆட்பதிவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ஆண்டு தோறும் சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம்பேர் 16 வயதைப் பூர்த்தி செய்கின்றனர் என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் கே. ஜே. வி ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்கான உறுதிப்படுத்தும் அதிகாரிகளாக அந்தந்த பாடசாலைகளின் அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்தப் புதிய திட்டத்தின் கீழ் கொழும்பிலுள்ள 158 பாடசாலைகளில் தேசிய அடையாள அட்டைகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை. அதிபர்களூடாக விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பும் போது பிறப்புச் சான்றிதழ்களை அனுப்ப வேண்டியதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சகல வேலைகளும் செய்த நல்ல நிலையிலுள்ள 5 சிறி - ''கில்மன் மின்ஸ்'' மோட்டார் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கனகலிங்கம், 171, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (56758)

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட அழகிய கலர் மீன்கள் விற்பனைக்குண்டு. 12 மணியிலிருந்து தொடர்பு கொள்ளவும் A. அருளானந்தம், 588/8, நாவலர் வீதி, அரியாலை, (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன் ஒழுங்கை) (56718)

### மாடு காணவில்லை

மாவெள்ளை யேசி இன பெரிய மாடு ஒன்று 6ஆம் திகதி சனிக்கிழமை 3-30 மணியிலிருந்து காணவில்லை. கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். பா. தங்கவேல், 539, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (56764)

### யாழ்ப்பாணம்

06-06-96 அன்று வானொலியில் ஒலிபரப்பான 'படிப்பு' 300 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியது. அவரது நூல்கள் (1) யாழ்ப்பாணத்தில் அந்த 6 மாதங்கள் (2) நாடகம் எழுதுவது எப்படி? ரூபா 50. (56744)

### ஆங்கிலக் கல்வி

ஆங்கிலம்சுலபமாக எழுத, வாசிக்க கதைக்க பயில ஆங்கிலக் கல்வி நிலையம் 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி. (56763)

### தவறிவிட்டது

மீசாலை கிழக்கைச்சேர்ந்த குலேந்திரம் மிருகசோதி என்பவரின் தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் மீசாலை மேற்கு வங்களா றோட் வாகையடிச் சந்திக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மீசாலை கிழக்கு, கிராம சேவையாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (56746)

உலகநாதன் ஜெயரஜனியின் விசேட அடையாள அட்டை இல. 091305247 யாழ்ப்பாணத்துக்கும் பண்டத்தரிப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (56765)

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருநாவுக்கரசு சிவராஜன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இணுவில் தெஸ்பியன் கல்வி நிலையம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (56766)


**A/L 2000**

(கலை, வர்த்தகம்)

06 - 06 - 98 அன்று ஆரம்பமாகிவிட்டன.

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்.

(56742)


## நாணயக் குற்றி தொலைபேசி முன் நீண்ட வரிசை

சுன்னாகத்தில் நாணயக் குற்றி தொலைபேசி சேவை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அண்மையில் இந்த நாணயக்குற்றி தொலைபேசி சேவை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி நிலையம் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கபபட்டதைத் தொடர்ந்து மக்கள் வெளியிடங்களில் உள்ள தமது உறவினர்களுடன் தொடர்பு கொண்டு கதைப்பதற்காக நீண்ட வரிசையில் காத்து நின்றனர்.

தினமும் இவ்வாறு தொலைபேசித் தொடர்புக்காக மக்கள் காத்து நிற்கின்றனர். (ஐ-152)

## கசிப்பு உற்பத்தி

திருநெல்வேலி வடக்கில் சில இடங்களில் அண்மைக் காலமாக கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதிகளுக்குச் சென்று கசிப்பு அருந்தும் பலர் பகல், இரவு வேளைகளில் பல சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதாகவும் தெரிய வருகிறது. (ஐ-7)

## புதிய நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ள தொழில் நுட்பக் கல்வி

யாழ்ப்பாணம், ஜூன் 11

21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர் நோக்கக் கூடியவாறு எமது சமூகத்தில் தொழில் நுட்பக் கல்வியை வளர்க்க வேண்டியது மிக அவசியம். அந்த வகையில் யாழ். உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் இதற்குப் பெரிதும் துணை புரியும் என்பதனை மறுக்க முடியாது.

ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 4 ஆம் திகதி யாழ். உயர் தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்தை பலாலி வீதியில் உள்ள புதிய கட்டடம் ஒன்றில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன பணிப்பாளர் ரி. ராஜரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சிவதாசன் நிறுவனப் பெயர்ப் பலகையையும், கணனி அறையையும் திறந்து வைத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்—

இந் நிறுவனத்துக்காக கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் இங்கு எடுத்து வரப்படாமல் கொழும்பில் உள்ளன. அவற்றை இங்கு எடுத்து வருவதற்கும், விளையாட்டு உபகரணங்கள் நூல் நிலையத்துக்குத் தேவையான நூல்களைப் பெறுவதற்கும் வேண்டிய நிதியை வழங்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில்யாழ். அரசஅதிபர் கே. சண்முகநாதன், நிறுவனப் பணிப்பாளர் ரி. ராஜரட்ணம், யாழ். பல்கலைக் கழககலைப்பீடாதிபதிபேராசிரியர் அ. சண்முகதாஸ், மாணவர் மன்றத் தலைவர் ந. முகுந்தன், பகல் நேர மாணவர் மன்றத் தலைவர் இ. பீஷ்மன், பகுதி நேர மாணவர் மன்றத் தலைவர் வே. சிவாகரன், விரிவுரையாளர் வி. கருணாநிதி ஆகியோரும் உரையாற்றினார்கள். (ஐ-9-135-6)

## வலி. வடக்கில் பல நோக்கு மண்டபம் மக்கள் பாவனைக்கு

சுன்னாகம், ஜூன் 11

வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் நுண் கருத்திட்டத்தின் கீழ் மூன்று புனரமைப்பு வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

இதன் படி —

வசாவிளான், அளவெட்டி ஆகிய இடங்களில் பலநோக்குப் பாவனைக்கான மண்டபங்களும், அளவெட்டி மத்தி மற்றும் கணேஸ்வரம் பகுதிகளிலுள்ள இரு நெசவு சாலைகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் குட்டியப்புலம் கிராமிய வீதியும் திருத்தம் செய்யப்படவுள்ளது. (ஐ-27)

## பொதுசன உதவிப்பணம்

சுன்னாகம், ஜூன் 11

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான ஏப்ரல், மே மாதங்களுக்கான கொடுப்பனவு வவுச்சர்கள் உரிய தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

அவற்றை உரிய தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாமெனவும் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகஸ்தர் அறிவித்துள்ளார். (ஐ-27)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராஜாவின் 4 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி துரைராஜா மண்டபத்தில் மு. தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் இந்து சமய கலாசார அமைச்சின் செயலாளர் சி. தில்லைநடராசா, யாழ். பல்கலைகழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் நினைவுப் பேருரையாற்றுவார்.

இக் கூட்டத்தை உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (ஐ-8-ரீ)

## சம்பந்தர் குருபூசை

திருஞானசம்பந்தா குருபூசையை முன்னிட்டு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் இன்று காலை 8 மணியளவில் நல்லூர் ஸ்ரீ சட்டநாதசுவாமி கோயிலில் ஞானசம்பந்தர் பெருமானுக்கு அபிஷேகம், பூசை என்பனவற்றையும் நடத்தவுள்ளனர்.

அற்புதப்பதிகம் முற்றோதல் நிகழ்வும் இடம்பெறும்.

## உடற்பயிற்சி போட்டி

வலிகாமம் தெற்கு, ஜூன் 11

தெல்லிப்பழைக் கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆண், பெண் இரு அணிகளும் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டன.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு தெல்லிப்பழை கல்விக் கோட்ட அதிகாரி ஆ. கமலநாதன் தலைமை வகித்தார்.

உடற் பயிற்சி ஆண்கள் அணியில் யூனியன் கல்லூரி முதலாம் இடத்தையும், மல்லாகம் மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், மகாஜனா கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் அணியில் முதலிடத்தை யூனியன் கல்லூரியும், இரண்டாம் இடத்தை மகாஜனாக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன. (ஐ-152)


தரமான புளொக் தயாரிப்பதற்கு நாடவேண்டிய இடம்



**அருண் புளொக் தயாரிப்பாளர்**

அத்துடன் குறைந்த கட்டணத்தில் தரமான முறையில்

- போட்டோ பிரதிகள்
- அடையாள அட்டை கவரிடுதல் (LAMINATION)

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



**சுன்னாகம் லயன்ஸ் கழகம்**

இலவச தையற் பயிற்சிக்கு பயிற்சியாளர்களை சேர்த்துக் கொள்வதற்கான **விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

வறுமைப்பட்டவர்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு வழங்கும் நோக்குடன், மேற்படி இலவசவு பயிற்சிக்கான பயிற்சியாளர்களைத் தெரிவு செய்து கொள்வதற்காக தங்கள் சுய விவரத்துடனான விண்ணப்பத்தினை கீழ்க்கண்ட விலாசத்திற்கு **1998 - 06 - 25** -க்கு முன்பதாக அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
சுன்னாகம் லயன்ஸ் கழக [illegible]
[illegible] வீதி, சுன்னாகம்.

(56762)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 19 — 08 — 1937 | 12 — 05 — 1998 |

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் முருகேசு நடராசா

(ஓய்வுபெற்ற இலிகிதர், துறைமுக அதிகார சபை, கொழும்பு)

அன்பின் இருப்பிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எம் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். அந்தியேட்டிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 11 - 06 - 98இல் நடைபெறும்.

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி-3983)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதயன்**

# யாழ். பல்கலைக்கழக வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் உழைத்தவர்

## நல்ல யோசனை

தமிழ் மக்கள் நாட்டின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் அவர்கள் இரண்டாந் தரப் பிரஜைகளாகவே அரசாங்க அதிகாரிகளால் கணிக்கப்படுகிறார்கள். அதே போன்று சந்தேகப் பிராணிகளாகவும் பார்க்கப்படுகிறார்கள்.

இத்தகைய பின்னணியில் அவசர காலச் சட்ட விதிகளும், பயங்கரவாதத் தடைச் சட்ட விதிகளும் அரச அதிகாரிகளும் மற்றும் ஆயுதப்படையினரும் தமிழ் மக்களை மிருகங்களிலும் கேவலமாக நடத்துவதற்குத் துணை செய்கின்றன; அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்றன.

சொந்த வாழ்க்கையில் பொலிஸ் நிலையம் மற்றும் நீதிமன்றப்படிகளைத் தானும் காணாத தமிழர்கள் பலரும் தரக் குறைவாகவும், அசிங்கமாகவும் நடத்தப்பட்ட கதைகள் பல. தமிழ்ப் பெண்கள், நங்கையர்கள் இரவு ஆடைகளுடன் அழைத்துச் செல்லப்பட்டு புகைப் படம் எடுக்கப்பட்ட சம்பவங்கள் பழைய செய்திகள் ஆகிவிட்டன.

இது குறித்து இப்பத்தியில் பல தடவைகள் எழுதி விட்டோம்; எனினும் மீண்டும் எழுதாமல் இருக்க முடியவில்லை. தங்கள் சொந்த மக்கள் மீது பாதுகாப்புக் காரணம் அதன் பொருட்டு நடைமுறையாகும் ஒழுங்கு விதிகள் என்ற போர்வையில், நடத்தப்படும் இந்த அநியாயத்தைத் தடுத்து நிறுத்தும் சக்தி நாடாளுமன்ற ஆசனங்களுக்குச் சூடேற்றும் தமிழ் உறுப்பினர்களுக்கு இல்லை என்பது நிதர்சனமாகிவிட்டது; இயலாமை அப்பட்டமாகி விட்டது.

இது விடயமாக இவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்தும் பேசினார்கள்; நீதி அமைச்சர் பீரிஸுடன் கலந்துரையாடினார்கள்; தமிழர்கள் விசாரணை செய்தல், கைது செய்தல் சம்பந்தமாக நியாயமான கௌரவமான நடைமுறைகளைக் கடைப்பிடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது — என்று பத்திரிகைச் செய்திகள் வெளிவந்தனவே அன்றி நடைமுறையில்— செயலளவில்—பலவிடயங்கள் நீர் மேல் எழுத்துக்களாகின.

இதனால் இவ்விவகாரத்தை கொழும்பு வாழ் தமிழர்கள் தாமே தமது கையில் எடுத்துக் கொள்ளத் துணிந்திருக்கிறார்கள். நேற்று முன்தினம் நடைபெற்ற கொழும்பில் இயங்கும் தமிழ் மன்றங்களின் கூட்டத்தில் தமிழர்கள் கைது செய்யப்படுவதனை எதிர்த்து வெகுஜனப் போராட்டம் நடத்துவது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்படும் போது, அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு முன்னால் வெகுஜனப் போராட்டம் நடத்துவது என்ற உத்தேச திட்டம் அரசாங்கத்தின் நாடகத்தையும் தமிழ் எம்.பிகளின் இயலாமையையும் வெளிச்சம் போட்டுக் காட்டும். மாகாண சபைத் தேர்தல் தெற்கில் நடைபெறுவதால் நிச்சயம் அரசின் கவனத்தை ஈர்க்கும் முயற்சி திருவினையாக்கும். இங்கு முயற்சி கௌரவமான சூழலுக்கு வழி திறக்கும் என நம்பலாம்.

---

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர்துரைராஜாவின்நினைவு நாள் இன்றாகும். இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அதிலும் இவரைத் துணைவேந்தராகப் பெற்றுப் படிக்கப் பேறு கிடைத்தல் அரிது.


உலகின் மாமனிதருள் எங்களின் துணைவேந்தரும் ஒருவர். ஆம் அவரின் அந்த அமைதியை, எளிமையை, இனிய அன்பை, அறிவாற்றலை இனி யாரிடத்தில் ஒருமித்துக் காண்போம். அவரின் பல்கோணத் திறமைகளில் ஒரு சிறு கோணத்தை மட்டும் எடுத்தியம்புகின்றேன்.

நிர்வாகத் திறமை, ஆளுமை, ஆம்! சிற்றூழியர் முதல் பீடாதிபதிகள் வரை யாரும் எந்நேரத்திலும் எங்கள் துணைவேந்தரை நேரே காணச் செல்லலாம். பிரச்சினைகளால் கவலை தோய்ந்த முகத்துடன் செல்லும் எவரும் வெளியேறும் போது சிரித்த வண்ணம் துள்ளலுடன் தான் வருவார்கள். எமக்கு வளாகத்தில் உள்ள பரமேஸ்வரன் கோவிலுக்குச் செல்வதும் துணைவேந்தரின் அலுவலகத்திற்குச் செல்வதும் ஒன்றாயிருந்தது. ஆம் அங்கு வாய் பேசாது அருளும் ஆண்டவர் இங்கு அளவளாவி அருளும் ஆண்டவர் எங்கள் துணைவேந்தர்.

தொழிலாளர் சங்கங்கள் மாணவர்சங்கங்கள் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளைத் துல்லியமாய்த் தீர்த்து விடுவார். நாங்கள் மாணவர்களின் கோரிக்கைகளை முன்வைத்து போராடவேகமாய் உணர்ச்சிப் பிளம்புகளாய் துணைவேந்தர் அறையை நாடிய போதெல்லாம் ஏனோ அந்த இன்முகத்தைக் கண்டதும் அமைதியடைந்துவிடுவோம். நிச்சயம் வெற்றியுடன் தான் எம்மை வழியனுப்புவார். அந்த வரவேற்கும் பண்பு, பேச்சாற்றலோ அன்றி முகராசியோ இன்றுவரை யாமறியோம் எது எம்மை அவரிடத்தில் அடிமைப்படுத்தியது என்று.

துவிச்சக்கர வண்டியிலே 32 மைல்கள் தானே ஓடி, 90 இல் மூடியிருந்த பல்கலைக் கழகத்தைத் திறந்து எமது கல்வியைத் தொடர வழி செய்தார். அது மட்டுமன்றி தினமும் வல்லைவெளிக் காற்றை எதிர்த்து, துவிச்சக்கர வண்டியில் வந்து வளாகக் கடமை, பொது மக்கள் பணிகளை நிறைவேற்றி மீண்டும் இரவு வீடு திரும்புவார். எம் துணைவேந்தர் நினைத்திருந்தால் சொகுசாகக் காரில் பயணஞ் செய்திருக்கலாம். ஆனால் எம் மக்கள் படும் இன்னல்களைத் தானும் அனுபவிக்க வேண்டும் என்று மறுத்தார்.

மேலும் விவசாய பீடத்தை உரிய கட்டடங்களின்றி எவ்வாறு அமைக்கலாம் என்று மேலிடங்கள் தயங்கியபோது எம் மாணவர்கள் ஓலைக் கொட்டில்களில் தான் படித்து வந்தவர்கள் இங்கும் இதில் பயிலுவார்கள் என்று விவசாய பீடத்தைக் கிளிநொச்சியில் ஆரம்பித்தார். அதுமட்டுமன்றி வவுனியாவில் விவசாயக் கல்லூரி, இணைக்கப்பட்ட கல்லூரி என்று மாணவர் கல்விக்கு மேன்மேலும் வித்திட்டார். அவரின் திட்டங்களோ பற்பல. ஆம் கிளிநொச்சியில் பொறியியற் பீடம், புதிய பல விடுதிகள், புதிய கலையரங்கு, நீச்சற் தடாகங்கள், முல்லைத்தீவில் மீன்பிடியியல் துறைக்கல்லூரி என்று பலப்பல. அன்று



வளாகத்தில் நிகழ்ந்த பிரிவுபசாரக் கூட்டத்தில் இவற்றையெல்லாம் கூறி, இவற்றை நிறைவேற்றும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று எம்மையெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார். ''எனக்கு இந்த விழா எடுக்கக் காரணமாயிருந்தது எனது மேற்படிப்புக்கள் தான். ஆகவே எனதருமை மாணவச் செல்வங்களே! நீங்கள் மேன்மேலும் பயின்று ஓர் உன்னத நிலலையை அடைய வேண்டும்'' என்று பல்கலைக்கழகக் கல்வியுடன் நிறைவு காணவிருந்த எம்மவரின் மேற்படிப்புக்கு ஊன்று கோலாயினார். எமக்கு பிறநாட்டுப் பல்கலைக்கழக அனுமதிகளைப் பெற பல வழியிலும் உதவினார்.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத் துறையில் இன்று ஏற்பட்ட தனி மைதானம், கட்டடம், உபகரணங்கள் எல்லாம் எங்கள் துணைவேந்தரின் முயற்சி என்பது விளையாட்டு வீரர்கள் அளித்த பிரியாவிடை வைபவ நிகழ்வுகள் மூலம் காணலாம். மேலும், மாணவர் தலைவர் அளித்த உரையில் எங்கள் V. C simple, sweet, smart man'' என்றார். அதற்குத் துணைவேந்தர் புன்முறுவலுடன் தலையை ஒரு பக்கம் சாய்த்து ஆர்ப்பரித்த மாணவரை ஆதரித்தார். ஆம்! எங்கள் துணைவேந்தர் பட்டமளிப்பு விழாவில் நடந்துசெல்லும் அழகை ரசிக்கத் திரண்டு வரும் மக்கள் படை அவ்வளவும் ''Really smart man, a simple man!', ஆம், நாங்கள் எல்லாம் வளாக வைபவங்களில் 'என்னைப் பார், என் அழகைப்பார்' என்று செல்லுகையில் எங்கள் துணைவேந்தர் அழகாக, எளிமையாக இருப்பது கண்டு எமக்கு எம் மேலேயே கோபம் வரும்.

இங்கிருந்த அந்தக் கடைசிக் காலப்பகுதியில் திக்கெல்லாம், சிறு வைபவம் தொடங்கி மணிவிழா வரை எங்கள் காவியத்தலைவருக்கு விழா எடுத்தனர். அதிலெல்லாவற்றிலும் தமது உடலயர்வைப் பொருட்படுத்தாது பங்குபற்றி எல்லோரையும் கௌரவித்தார்.

நாம் சிறிதும் எதிர்பார்க்கவில்லையே எங்கள் துணைவேந்தரை இவ்வளவு விரைவில் இந்தக்கோலத்தில் காண்போம் என்று. பிரியாவிடை வைபவங்களிற் கண்ணீர் வரும் வேளைதனில் அவர் உரைகள் எம்மை உற்சாகப் படுத்தினவேயன்றி எம்மை அழவிடவில்லை. ஆம்! எங்கள் துணைவேந்தர் பற்பல திட்டங்களை விவரித்தும் எமது கடமைகளை நினைவுபடுத்தினாரேயன்றி இழப்புக்களைக் கூறவில்லை. என்னைப் பொறுத்தவரை அந்த இறுதி ஊர்வலத்தை இயன்றவரை மறந்து, அந்தப்பழகிய இனிய நாள்களையே மனதில் வைத்திருக்கின்றேன்.

நாம் 1992 ஆம் ஆண்டில் ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற மினி ஒலிம்பிக்கில் கலந்து கொண்ட போது எம்மிடம் துணைவேந்தர் அவர்களும் மரணபயமிக்க கிளாலிப் பயணத்தை மேற்கொண்டு நாம் தங்கியிருந்த விடுதியில் தினமும் மாலை ஆறு மணியளவில் வந்து எம்முடன் அளவளாவிச் செல்வார். எமக்குப் பயணக் களைப்பு இருந்த இடம் தெரியாது போயிற்று. மற்றைய பல்கலைக்கழக மாணவர்களுக்குத் திகைப்புத் தான். பேராதனைப் பொறியற்பீட மாணவர் ''Thurai'sTheorem ' பயிலுகின்றனராம் எனவே எங்கள் துணைவேந்தரை மிக அருகில் கண்டு மகிழ்ந்தனர். மெய்வல்லுநர் நிகழ்வுகள் சுகததாசவிளையட்டரங்கில் நிகழ்ந்த போது துணைவேந்தரும் எம்முடன் படிக்கட்டில் இருந்து எமது வீரர் 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் முதலாம் இடத்தைப் பெற்றதைப் பார்த்து மகிழ்ந்தார். அவ்வேளை களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் துணைவேந்தரை இனங் கண்டு படிக்கட்டில் அமர்ந்துஉரையாடினார்கள். அவ்வேளை துணைவேந்தரை விழா அமைப்பினர் இனங்கண்டு பிரதம விருந்தினராக அழைத்துச் சென்றுவிட்டனர். பின்பு அம்மாணவர்கள்எங்களிடம்: ''நீங்கள் பாக்கியசாலிகள், உங்கள் துணைவேந்தர் எவ்வளவு இனிமையாயும், தோழமையாயும் மாணவர்களிடம் பழகுகின்றார். எமக்குப் பொறாமையாய் இருக்கின்றது'' என்றார்கள். எமக்கோ மிகவும் பெருமையாயிருந்தது. அங்கே எங்கள் துணைவேந்தர் படிக்கட்டும், சிம்மாசனமும் ஒன்றுதான் என்று வீற்றிருந்தார்.

எங்கள் துணைவேந்தர் மாணவரது கல்வி எவ்வகையிலும் பாதிப்புறுவதைக் காணச் சகியாதவர். நிதியுதவியை அளிப்பதிலும், மனவலிமையை ஊட்டுவதலும் அவருக்கு ஈடிணை அவரே தான். நேரம் கிடைக்கும் போதெல்லாம் சிற்றூழியர் முதல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் வரை பேர் சொல்லி அழைத்து குசலம் விசாரிப்பார். எங்கள் துணைவேந்தரின் பிரிவுபசார விழா புலமைப் பரிசில் நிதி என்று நாம் மக்களிடையே நிதி திரட்டியபோது மக்கள் எவ்வளவு உற்சாகமாகச் சிறிதும் தாமதியாமல் எங்களின் துணைவேந்தருக்கு இல்லாததா என்று தந்துதவினர். அதுமட்டுமன்றி திரண்டு வந்து விழாவில் கலந்து சிறப்பித்தனர். இவையெல்லாம் எங்கள் துணைவேந்தர் வளாகத்தில் மட்டுமன்றி மக்களிடையேயும் மலையளவு மதிப்புடையவர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதுவரை யாரேனும் உலகத்தில் தாம் இறப்பதற்கு முன்னரேயே உண்மை இதயங்களின் வாழ்த்துரைகளை செவிமடுத்திருப்பார்கள் என்பது ஐயமே. இப்படியான யாழ். மக்கள் எம் மன்னவருக்கு நிறைவேற்றிய இறுதி மரியாதைகளை சற்றுச் சிந்தியுங்கள்! ஆம்! பள்ளிச்சிறார்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், அரசாங்க ஊழியர்கள், வைத்தியர்கள், எல்லோர் முகத்திலும் சோகம். வேதனைச் சிற்பங்களாய் வலம் வந்தனர். இதனை மீண்டும் மனதில் நிலைநிறுத்த வேதனையாயிருக்கின்றது. எனவே இத்துடன் இதை நிறுத்துகின்றேன். எம் துணைவேந்தரின் செல்வங்களின் அழுகையை, எழுதும் போதும் புல்லரிக்கின்றது. ஆம்! அந்த மழலைகள் தந்தையின் பணியைத் தொடரத் தான் போகின்றார்கள். அதற்கு எல்லாம் வல்ல இறைவனின் அருளும் ஆசியும் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

நன்றி:
(திறந்த பல்கலைக்கழக துரைராசா நினைவு மலர்)

**உமாவதி தாமோதரம்பிள்ளை**

★

## சாயி சிந்தனை

எல்லாவற்றிலும் உன்னையே காண முயற்சி செய். அப்பொழுது உன்னால் ஒருவரைக்குறையாகவும், மற்றவரை அதிகமாகவும் நேசிக்க முடியாது. ஏனெனில் அவர்கள் இருவரும் நீயே என்பதை உணர்ந்து கொண்டிருக்கிறாய். அன்பைப் பகிர்ந்து கொள்ளும் பொழுது, அங்கே அமைதி ஆட்சி செலுத்துகிறது. இயற்கை முற்றிலும் இறைவனின் அதிகாரத்திற்கு உட்பட்டது. படைப்பு என்பது அவருடைய தோற்றமே தவிர வேறில்லை. இவற்றைத் தெரிந்து கொண்ட பின் படைப்புப் பொருள்கள் மீது மயக்கம் கொள்வானேன்? இறைத் தன்மைகளை மிக உயர்ந்த அளவிற்கு பெருக்கிக் கொள்பவர் யாரோ; அவரே உண்மையான ஆனந்தத்தை அடைய முடியும்.

சத்யம் - சிவம் - சுந்தரம்.

(பகவான்)

## நாளை

வைகாசி - 29
வெள்ளிக்கிழமை
திதி: துதியை
முற்பகல் 10.40 வரை
நட்சத்திரம்: பூராடம்
முன்னிரவு 08.45 வரை.
சுபநேரம் 05.52 - 07.22
ராகுகாலம்: 10.22 - 11.52
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

கடவுளிடத்தில் சதா உண்மை அன்பும் பக்தியும் செலுத்துவது என்பது, உலக உயிர்களுக்கு உதவி புரிந்து மகிழ்ச்சி பெறுவதே.

வள்ளலார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆயிரம் கிணறுகளுக்கு குளோரின் இடுவதற்கு ரூ.10 லட்சம் நிதி ஒதுக்கீடு!

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். குடாநாட்டில் மக்மீளக்குடியேறிய பகுதிகளில் 10 ஆயிரம் கிணறுகளுக்கு குளோரின் இடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கென 9 லட்சத்து 90 ஆயிரம் ரூபா யாழ். பிராந்திய உள்ளூராட்சி திணைக்களத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிதி ஏழு பிரதேச சபைகளில் உள்ள குடி தண்ணீர்க் கிணறுகளின் குளோரின் பாவனைக்கென பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இரு தடவைகள் குறிப்பிட்ட கிணறுகளுக்கு குளோரின் போடப்படும்.

குளோரின் போடுவதற்காக பிரதேச ரீதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியின் விவரங்களும் வருமாறு:

★ நெடுந்தீவு — 10 ஆயிரம்கிணறுகள் 1 லட்சத்து 12 ஆயிரம் ரூபா.

★ வேலணை— 1,419 கிணறுகள் 1 லட்சத்து 59 ஆயிரம் ரூபா.

★ ஊர்காவற்றுறை—1,250 கிணறுகள் ஒதுக்கீடு 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபா.

★ வலி வடக்கு — 1,250 கிணறுகள் 1 லட்சத்து 59 ஆயிரம் ரூபா.

★ வலி தெற்கு — 1,420 கிணறுகள் 1 லட்சத்து 59 ஆயிரம் ரூபா.

★ வலி. கிழக்கு — 1,250 கிணறுகள் 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபா.

★ வலி.மேற்கு—1,250 கிணறுகள் 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபா.

குளோரின் போடுவதற்கான கிணறுகளை இனங்காணும் நடவடிக்கைகள் குறிபிட்ட பிரதேச சபைகளின் பிரிவுகளில் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெற வேண்டும் என்று யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

இது தொடர்பான கலந்துரையாடல்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் குறிப்பிட்ட பிரதேச சபைகள் நடத்தி முடிக்க வேண்டும்.

இந்தக் கலந்துரையாடலில் சுகாதார வைத்திய அதிகாரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர், சன சமூக நிலைய உத்தியோகத்தர், கிராமசேவை உத்தியோகத்தர் ஆகியோரையும் அழைத்து அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று கிணறுகள் இனங்காணப்பட வேண்டும் என்றும் அவர் பணித்துள்ளார்.

கிணறுகள் இனங்காணப்பட்ட பின்னர் அக் கிணறுகள் இறைக்கப்பட்டு துப்புரவாக்கப்பட்ட பின் குளோரின் போடும் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

ஜூன் 22 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஆகஸ்ட் 28 ஆம் திகதி வரை இக் கிணறுகளுக்கு குளோரின் போடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் உள்ளூராட்சி ஆணையாளர் க. சபாபதிப்பிள்ளை ஊடாக யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு கிணறுகளுக்கு குளோரின் போடும் திட்டத்துக்கான நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)

## தீ அணைப்பில் ஈடுபட்டோருக்கு ஊதியம் வழங்கப்படவில்லை

நெல்லியடி, ஜூன் 11

சவுக்கம் தோட்டத்தில் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கான வேதனம் ஒரு வருடமாகியும் இதுவரை வழங்கப்படவில்லை.

கடந்த 1997 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியன்று வடமராட்சி கிழக்கிலுள்ள மணற்காட்டு சவுக்கம் தோட்டத்தில் சுமார் 75 ஏக்கர் சவுக்க மரங்கள் தீப்பற்றி எரிந்த போது அரச அதிபரின் அனுமதியுடன் சுமார் இருபத்தேழு தொழிலாளர்கள் இத் தீயை அணைப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களுக்குரிய வேதனம் இதுவரை வழங்கப்படாதமையினால் சம்பந்தப்பட்ட தொழிலாளிகள் விசனமடைந்துள்ளனர்.

(ஐ-109)

## லீக்ஸ் பயிர்ச்செய்கை வெப்பத்தால் பாதிப்பு

அரியாலை, ஜூன் 11

யாழ். மாவட்டத்தில் இம்முறை பயிரிடப்பட்ட லீக்ஸ் அதிகளவு பயனை விவசாயிகளுக்கு ஈட்டிக் கொடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடும் வெப்பங்காரணமாக லீக்ஸின் இலைகள் கருகி அவற்றுக்கு பாதிப்பு ஏற்பட்டது.

இதனால் லீக்ஸ் மரக்கறிச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் நட்டம் அடைந்துள்ளனர்.

(ஐ-17)

## உழவு இயந்திரம் கொள்வனவு

யாழ்ப்பாணம், ஜூன் 11

பருத்தித்துறை நகர சபைக்கு உழவு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-5)

## மரக்கறி விலை உயர்வு

அரியாலை, ஜூன் 11

யாழ்ப்பாணத்தில் மரக்கறி வகைகளின் விலைகள் திடீரென உயர்ந்துள்ளன.

திருநெல்வேலி, கல்வியங்காடு போன்ற சந்தைகளில் மரக்கறி விலைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

கத்தரிக்காய் நாற்பது ரூபாவாகவும், பயிற்றங்காய் கிலோ ஐம்பது ரூபாவாகவும், வெண்டிக்காய் கிலோ நாற்பது ரூபாவாகவும், பச்சை மிளகாய் கிலோ நூற்றி இருபது ரூபாவாகவும், வெங்காயம் கிலோ முப்பது ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

(ஐ-17)

# தொழில் நுட்ப அறிவு இன்றி மனித வளம் முன்னேற முடியாது

## விஞ்ஞான சங்க விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 11

தொழில் நுட்ப அறிவு இல்லாது விட்டால் மனித வளம் ஒரு போதும் முன்னேற முடியாது. யாழ். விஞ்ஞானச்சங்கம் தொழில் நுட்ப விடயத்தில் கவனஞ் செலுத்தி இளைஞர்களை விஞ்ஞானிகளாக்க வேண்டும்,

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 6ஆவது வருடாந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தொழில் நுட்ப பயிற்சித் துறை இயக்குநர் கே. ஜெயரட்ணம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக பௌதிகத் துறை மண்டபத்தில் பேராசிரியர் எஸ், வி. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தொழில் நுட்ப கல்லூரி இளைஞர்கள், யுவதிகளுக்கு வேண்டிய தொழில் நுட்ப அறிவினை ஊட்டுவதில் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. அவர்கள் தொழில் நுட்பத்துறையில் உயர் நிலை அடைவதற்கான வழிவகைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இக்கல்லூரி மௌனமாக சேவை செய்து இவர்களை மேனிலைப்படுத்த முயற்சி செய்கிறது. தொழிற்பயிற்சி, தொழில் நுட்பம், துறை சார்ந்த பயிற்சிகள், முகாமைத்துவம் போன்றவற்றை சிறப்பான முறையில் இக் கல்லூரி போதித்து வருகிறது— என்று தெரிவித்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை உரையாற்றும் போது கூறியதாவது—

விஞ்ஞானச் சங்கம் சுற்றுச் சூழல் அபிவிருத்தியில் முக்கிய கவனஞ் செலுத்த வேண்டும். மாசடைந்து வரும் சூழலை பாதுகாக்கவும், சுற்றுச் சூழல் அபிவிருத்தி செய்வதிலும் பல நிறுவனங்கள் இன்று அயராது பாடுபட்டு வருகின்றன.

யாழ். மாவட்டம் பல இயற்கை வளங்களைக் கொண்டுள்ள ஒரு பிரதேசமாகும். நீர்வளமான கடல், குளம், ஏரி ஆகியனவும் கடற்கரை போன்றவையும் இங்கு அபரிமிதமாக இருக்கின்றன. இவற்றை நாம் சரிவரப்பாதுகாத்து அவற்றிலிருந்து நன்மைகளைப் பெறுகின்றோமா?

குளங்கள் வற்றிவிடுகின்றன. அத்துடன் அங்கு குப்பை கூழங்களையும், கண்ணாடித் துண்டுகளையும் போட்டு அதனை மாசடையச் செய்கின்றோம். சுற்றுப்புறச் சூழலை மாசடையச் செய்ய விடாது பாதுகாப்பது எமது ஒவ்வொருவரினதும் கடமையாகும்— என்று தெரிவித்தார்.

விஞ்ஞான சங்கத்தின் செயலாளர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் நன்றியுரை வழங்கினார்.

(ஐ-5)

# 6 வறிய குடும்பங்களுக்கு தொழில்ஊக்குவிப்பு உதவி

நெல்லியடி, ஜூன் 11

வதிரி தமிழ் மன்றம் கிறிஸ்துவுக்கான இளைஞர்அமைப்பின் உதவியுடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஆறு குடும்பங்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்காக 50 ஆயிரம் ரூபாவையும் —

தெரிவு செய்யப்பட்ட விதவைத் தாய்மார்களுக்கு பன்னவேலை, ஆடை தயாரிப்பு, கோழி வளர்ப்பு போன்ற தொழில்களுக்கு பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத தொகையையும்—

குடிசைக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 22 குடும்பங்களுக்கு 22 ஆயிரம் ரூபாவையும் வழங்கியுள்ளது.

அண்மையில் வதிரி தமிழ் மன்ற மண்டபத்தில் தலைவர் தி. வரதராசன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் இந்த உதவித் தொகைகள் வழங்கப்பட்டன.

## பலியிடுதலை அனுமதிக்கலாமா?

அண்மையில் பிரான்பற்று மாரியம்மன் கோவிலில் இடம்பெற்ற பலியிடும் கருணையற்ற செயல் உண்மையான சைவமக்களின் நெஞ்சத்தை வேக வைத்துள்ளது. தொடர்ந்து நாளை மறுதினம் 13 ஆம் திகதி கவுணாவத்தை வைரவர் ஆலயத்திலும், எதிர்வரும் 20 ஆம் திகதி நவாலி முத்துமாரி அம்மன் கோவிலிலும் நடைபெறப்போகின்றது என்ற செய்தி நெஞ்சை வெடிக்கவே செய்துவிட்டது.

வேதங்களிலே யசுர் வேதம் பலியிடுதல் பற்றிக் குறிப்பிடுகிறது. ஆனால் சைவ சமயம் வேதத்தை ஏற்றுக் கொள்ளும் வைதீக சமயப் பிரிவைச் சேர்ந்திருந்தாலும் ஆகமங்களையே பூசை முறைகளுக்குக் கடைப்பிடிக்கிறது.

உதாரணமாக இலங்கையைப் பொறுத்த வரை கோயில்களின் அமைப்பு முறைகள் நிகழ வேண்டிய பூசை முறைகள், மந்திர உச்சாடனங்கள் என்பனவெல்லாம் சிவாகமங்களைத் தழுவி அகோர சிவாச்சாரியார் எழுதிய பத்ததிகளை ஆதாரமாகக் கொண்டே நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

எனவே ஆகம வழக்கைக் கைக்கொள்ளும் சைவசமயத்தவராகிய நாம் வேதத்திலே கூறப்பட்டுள்ள பலியிடுதலை ஏற்றுக்கொள்வதென்பது வழமைக்கும், எங்கள் இயல்புக்கும் புறம்பானதாகும்.

ஆரம்ப காலங்களிலே தேர்த்திருவிழா போன்ற சந்தர்ப்பங்களிலே உயிர்களைப் பலியிட்டே தேரிழுக்கும் வழக்கம் இருந்தது. அல்லாவிடில் தீய அனர்த்தங்கள் ஏற்படும் என்ற மூட நம்பிக்கையே இதற்குக் காரணமாகும். ஆனால் காலப் போக்கில் நாவலர் போன்ற நெறியாளர்கள் தோன்றி எதிர்க்குரல் எழுப்பிய காரணத்தால் அம் மூட நம்பிக்கைகள் தகர்த்தெறியப்பட்டன. பதிலாக பூசணிக்காய் வெட்டி, குங்குமம் தடவி பலியை உருவகிக்கும் முறைமை நடைமுறைக்கு வந்தது.

அன்றைய காலங்களில் நாவலர் போன்ற சமயப் பெரியார்கள் தனியாக நின்றே பலியிடுதலை எதிர்த்து ஓங்கிக் குரல் கொடுத்தார்கள். இன்றுகூட எத்தனையோ சமய நிறுவனங்களும், பெரியார்களும் உள்ளனர். இவர்கள் ஒன்றாகச் சேர்ந்து குரல் கொடுப்பதன் மூலமே ஆலயங்களில் பலியிடுதலைத் தடுக்கலாம்.

எமது சமயத்தின் தனித்தன்மை எப்பொழுதும் பேணப்பட வேண்டியதொன்றாகும்.

கந்தரோடை. இ. கனகசிங்கம்

## பலியிடுதல் நாட்டைக் காப்பாற்றும்

யசுர் வேதத்தில் கூறப்பட்ட யக்ஞங்கள் அனைத்தும் பலியிடுதலை ஒப்புக் கொண்டு அவ்வாறு செயற்பட்டன. இன்றும் ''பலியிடுதல்'' புதுப்புதுச் செயற்பாடுகளை தன்னகத்தே கொண்டுதான் நடைபெறுகின்றன. ஆன்மாவின் வளர்ச்சிக்கும் அதன் மூலம் உடல் வளர்ச்சிக்கும் சகலரும் வாய்க்குள் பலிபோட்டுக் கொண்டே வாழ்கிறார்கள். அதே போன்று தான் பூவுலகின் வளர்ச்சிக்கும், பூவுலக மக்களது மேன்மைக்கும் வேள்விகள் நன்றாக உதவுகின்றன. ஒருகால் வேள்வியோடு வசந்த விழா நடைபெறாததால் சீற்றங் கொண்ட சமுத்திரராசன் காவிரிப்பூம்பட்டணத்தை தனக்குள் அமுக்கி விட்டான் என்ற செய்தியை அறிந்தும் பஞ்சமா பாதகங்களை அனுசரித்து வாழும் ஒரு சில ஆயாதிகள், ஆயிரமாயிரமாண்டுகளாக வளர்ந்து வரும் வேள்விகளைத் தடுக்க முயல்வதும், புத்தி புகட்ட முன்வருவதும் இந்த நாட்டை அழிக்க முயலும் செயலாகும். நாட்டைக் காப்பாற்ற வேண்டின் வேள்விகள் வளர வேண்டும்.

கவுணாவத்தை வைரர் கோயில் வேள்வி முறையாகவும் சாஸ்திர விதிப்படியும் 12, 13 ஆம் திகதிகளில் நடைபெற சகல ஆயத்தங்களும்செய்யப்பட்டுள்ளன. பக்தகோடிகள் வருகை தந்து வைரவப் பெருமானின் அருள் பெறுவர் என்பது திண்ணம்.

மாவிட்டபுரம் மு செல்லக்குட்டி


## வாழ்த்துகின்றோம்

யா/சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

க. பொ. த [சா/த] பரீட்சை - 1997

| | | |
|---|---|---|
| 1. | J. யூடிற் பென்சியூலா | — 5D, 2C. |
| 2. | J. மேரி கொன்சலீற்றா | — 4D, 3C, S. |
| 3. | A. மேரி நிலாந்தினி | — D, 6C, S. |
| 4. | S. ஆன் சுஜித்தா | — 2D, C, 3S |
| 5. | J. யூலியற் ஜெனிற்றா | — D, 4C, 2S. |
| 6. | L. நிஷாந்தினி | — D, 3C, 3S. |

க. பொ. த (உ/த) கற்கத்தகுதி பெற்றோர் 17 பேர்.

மேற்படி மாணவர்களையும், அவர்களின் உயர்விற்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

— பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

(சி/3986)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திருமலை விளையாட்டு போட்டிகளில்

# யாழ். வீரர் பங்குபற்ற முடியாத நிலை

## கப்பல் வசதி செய்து கொடுக்கப்படவில்லை

திருகோணமலை, ஜூன் 11

எதிர்வரும் 22 ஆம் திகதி திருகோணமலையில் ஆரம்பமாகவிருக்கும் வடக்கு — கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான மெய்வன்மை மற்றும் விளையாட்டுப் போட்டிகளில்யாழ். மாவட்ட வீரர்கள் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலிருந்து 222 வீரர்கள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக திருகோணமலைக்குச் செல்ல விருந்தனர்.

இந்த மாணவர்கள் திருகோணமலைக்குச் செல்வதற்கு கப்பல் வசதி செய்து கொடுக்க வடக்கு — கிழக்கு மாகாண சபை முயற்சி எடுத்திருந்தது என்றும —

அந்த முயற்சி பலனளிக்காத காரணத்தால் யாழ். மாவட்ட வீரர்கள் பங்கு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் — இந்த விளையாட்டு நிகழ்வில் யாழ். மாணவர்கள் பங்குபற்றுவது தொடர்பான ஒழுங்குகளைக் கவனிக்க திருகோணமலை சென்ற யாழ். வலயம் ஒன்றின் உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற் பயிற்சி) த. அருணகிரிராஜா நேற்றிரவு தெரிவித்தார்.

அதே வேளை — எதிர்வரும் 19 ஆம் திகதி திருகோணமலையில் ஆரம்பமாகவிருக்கும் தமிழ்த் தினப் போட்டிகளில் யாழ். மாணவர்கள் பங்குபற்ற கப்பல் வசதியை மாகாண சபை ஏற்பாடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் —

அதன் காரணமாக தமிழ்த் தினப்போட்டிகளிலும் யாழ். மாணவர்கள் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் — மற்றொரு செய்தி தெரிவித்தது. (இ-3)

## துரைராஜா நினைவுதினம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவின் 4 ஆவது ஆண்டு நினைவஞ்சலி வைபவம் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

இன்று காலை 10 மணிக்கு பல்கலைக் கழக ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில்சங்காபிஷேகம் இடம் பெறும்.

பிற்பகல் 3 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

சகல பீடங்களையும்சேர்ந்த கல்விமான்கள் நினைவஞ்சலி உரையாற்றுவர்.

அதைத் தொடர்ந்து பிற்பகல் 5 மணிக்கு பல்கலைக் கழக மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெறும். (இ-3)

## கப்பல் சேவையுடன் தொடர்பில்லை

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பாவனைப் பொருட்களை ஏற்றி வருவதற்கு ''கிங் லண்டன்'' என்ற கப்பலை ''லிவர்பூல் நவிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்'' என்ற தனியார் நிறுவனம் வாடகைக்கு அமர்த்தி உள்ளது.

நேற்று முன்தினம் 'உதயன்' 4 ஆம் பக்கத்தில் வெளியான இதுதொடர்பான செய்தியில் ''வி. எஸ். பி. குறூப்'' நிறுவனமே குறிப்பிட்ட கப்பலை வாடகைக்கு அமர்த்தியதாக வெளிவந்த செய்திதவறாகும்

''வி. எஸ். பி. குறூப்'' நிறுவனத்துக்கு யாழ். மாவட்டம் தவிர்ந்த வேறு இடங்களில் கிளை நிறுவனங்கள் எதுவும் இல்லை; செயற்பாடுகளும் இல்லை — என்று அந்த நிறுவனத்தினர் அறிவிக்கின்றனர். (அ)

## உலக உதைபந்தாட்டம் வெற்றியீட்டிய அணிகள்

பாரிஸ், ஜூன் 11

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் 1930 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றன.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை மிகவும் கோலாகலமாக நடத்தப்படும் இப்போட்டிகளில் இதுவரை நடந்த போட்டிகளின் விவரம் வருமாறு:-

போட்டி நடைபெற்ற ஆண்டு, இடம், வெற்றியீட்டிய அணி ஆகியன முறையே இடம்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| ★ 1930 | — உருகுவே | — உருகுவே |
| ★ 1934 | — இத்தாலி | — இத்தாலி |
| ★ 1938 | — பிரான்ஸ் | — இத்தாலி |
| ★ 1950 | — பிறேசில் | — உருகுவே |
| ★ 1954 | — சுவிற்சர்லாந்து | — மே. ஜேர்மனி |
| ★ 1958 | — சுவீடன் | — பிறேசில் |
| ★ 1962 | — சிலி | — பிறேசில் |
| ★ 1966 | — இங்கிலாந்து | — இங்கிலாந்து |
| ★ 1970 | — மெக்சிக்கோ | — பிறேசில் |
| ★ 1974 | — மே. ஜேர்மனி | — மே. ஜேர்மனி |
| ★ 1978 | — ஆர்ஜென்ரீனா | — ஆர்ஜென்ரீனா |
| ★ 1982 | — ஸ்பெயின் | — இத்தாலி |
| ★ 1986 | — மெக்சிக்கோ | — ஆர்ஜென்ரீனா |
| ★ 1990 | — இத்தாலி | — மே. ஜேர்மனி |
| ★ 1994 | — அமெரிக்கா | — பிறேசில் |

★ 1942, 1946 ஆம் ஆண்டுகளில் 2 ஆவது உலக யுத்தம் காரணமாக உலகப் போட்டிகள் இடம்பெறவில்லை. (ஐ-10)

## போட்டி முடிவுதிகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

லியோ மாவட்டக் கருத்தரங்கை ஒட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் கட்டுரை, ஓவியப் போட்டிகளுக்கான முடிவு திகதி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட லியோத் தலைவர் பா. தவபாலன் அறிவித்துள்ளார்.

கட்டுரைப் போட்டியில் மாணவர்கள் வயதெல்லை இன்றிப் பங்குபற்றலாம் என்றும் —

ஓவியப்போட்டியில் ஆண்டு 10, 11, 12இல் பயிலும் மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம் என்றும் — அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்ற உள்ளூராட்சி ஊழியருக்குச் சம்பளம்

யாழ்ப்பாணம் ஜூன் 11

யாழ். பிராந்திய உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றிய வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்திருக்கும் அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 'சூரியப் பிரகாசம்' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து 1996 ஏப்ரலில் வன்னிப் பகுதிக்கு இடம் பெயர்ந்து இதுவரையும் கொடுப்பனவு எதுவும் பெற்றுக் கொள்ளாத ஊழியர்களுக்கு இந்தச் சம்பளம் வழங்கப்படும்.

இவர்கள் இடம்பெயர்ந்த காலத்திலிருந்து இச்சம்பளம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றிய நூற்றுக்கும் அதிகமான ஊழியர்கள் வன்னிக்கு இடம பெயர்ந்து இதுவரையும் மீளத் திரும்ப முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவது தொடர்பான கடிதங்கள் யாழ். உள்ளூராட்சி திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## ஆங்கில தின விழா

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய ஆங்கில தினவிழா இன்று வியாழன் காலை 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ச. ஞானலிங்கம் தலைமையில் நடைபெறும்.

விழாவில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. கயிலைநாதன் கலந்து கொள்வார்.

# தென்னைச் செய்கைக்கு ரூ. 31 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். மாவட்டத்திலுள்ள பத்து பிரதேச சபைகளுக்கு தென்னைச் செய்கைக்கென 31 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக்கு 4 லட்சம் ரூபாவும், வேலணைக்கு 3 லட்சம் ரூபாவும், ஊர்காவற்றுறைக்கு 4 லட்சம் ரூபாவும், நல்லூருக்கு 2 லட்சம் ரூபாவும், உடுவிலுக்கு 3 லட்சம் ரூபாவும், சங்கானைக்கு 2 லட்சம் ரூபாவும், கோப்பாய்க்கு 2 லட்சம் ரூபாவும், சண்டிலிப்பாய்க்கு 2 லட்சம் ரூபாவும், பருத்தித்துறைக்கு 6 லட்சம் ரூபாவும், கரவெட்டிக்கு 3 லட்சம் ரூபாவும் தென்னைச் செய்கைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தென்னை அபிவிருத்திச் சபையின் ஒத்துழைப்புடன் மேற்குறிப்பிட்ட பிரதேச சபைகளில் தென்னை நடுகை மேற்கொள்ளப்படவுள்ளது. (இ-5)

## கடலேரிகளை புனரமைக்க நோர்வே அரசு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 11

தொண்டமனாறு, நாவற்குழி, அராலி ஆகிய பகுதிகளிலுள்ள கடலேரிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

நோர்வே அரசின் நிதியுதவியுடன் இந்த வேலைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

இந்த புனரமைப்புவேலை தொடர்பான சாத்தியக் கூற்று அறிக்கை தயாரிக்கும் பொருட்டு நோர்வே மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த இரு ஆலோசகர்கள் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

எதிர்வரும் 17 ஆம் திகதி இங்கு வருகை தரும் இவர்கள் இருவரும் மூன்று கடலேரிப்பகுதிகளுக்கும் சென்று கடலேரிகளைப் பார்வையிட்டு சாத்தியக் கூற்றுஅறிக்கையை தயாரித்து நோர்வே அரசுக்கு அனுப்பி வைப்பார்கள். (இ-5)

## சமயச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 11

இணுவில் சைவத்திரு நெறிக கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட சமயச் சொற்பொழிவு இன்று வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன்கோயில் அன்னதான சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு. சண்முகநாதன் அதில் உரையாற்றுவார். திருஞானசம்பந்தர் குருபூசையை ஒட்டி சிவகாமி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வில்லிசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

## தொலைக்காட்சிகளின்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

களுக்கு முன்பாகக் குழுமினர்.

இந்தப் போட்டி ஆரம்பமாவதற்கு சில நாள்களுக்கு முன்னரே பல நாடுகளில் — குறிப்பாக ஆசிய நாடுகளில் — தொலைக்காட்சிப் பெட்டிகளின் விற்பனை திடீரென அதிகரித்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன.

உதைபந்தாட்ட விளையாட்டில் அதிகம் ஆர்வங் காட்டாத தென்னாசிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளிலேயே உலகக் கிண்ண உதைபந்தாட்ட ரசிகர்கள் அதிகம் பேர் உள்ளனர்.

அடுத்த ஒரு மாத காலப்பகுதி உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு விழாக்காலமாகும். (ஐ)

## பம்பாய் வெங்காயச் செய்கை

வரணி, ஜூன் 11

வடமராட்சி கிழக்கில் பம்பாய் வெங்காயச் செய்கையினைமேற்கொள்வதற்கான நடவடிக்கையினை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.

அம்பன், நாகர்கோவில், செம்பியன்பற்று ஆகியஇடங்களில் இவற்றை பயிரிடுவதற்குரிய ஆயத்தங்களில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

செய்கைக்கான பம்பாய் வெங்காய விதைகள் புலோலி கமநலசேவை நிலையத்தால் விரைவில் வழங்கப்படவுள்ளன. (ஐ-176)

## பிறேசிலின்...

(3ஆம் பக்கத் தொடர்)

நாட்டு வீரர் ரொனால்டோவே விளங்குகிறார்.

பிறேசிலின் நம்பிக்கை நட்சத்திரம் மட்டுமல்ல. உலக உதைபந்தாட்ட ரசிகர்களின், ரசிகைகளின் உள்ளம் கவர்ந்த கனவுக் கதாநாயகனும் அவர்தான்.

நான்கு தடவைகள் உலகக் கோப்பையை வென்ற பிறேசில் அணியின் நாயகன் [illegible] ஆட்டத்தைக் கண்டுகளிக்கவே கோடிக்கணக்கான ரசிகர்கள் பாரிஸில் வந்து குவிந்துள்ளனர். (ஐ)


### யாழ். மத்திய கல்லூரி

### க. பொ. த. (உயர்தர)

### கணித, விஞ்ஞான, வர்த்தக. கலை பாடநெறிகளுக்கான அனுமதி

மேற்படி வகுப்புகளுக்கு தகுதியான மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அலுவலக நேரத்தில் விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:

1999 இல் வகுப்பு ஒன்றில் சேரவிருக்கும் மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

— அதிபர்

(சி/3993)



### கண்ணீர் அஞ்சலி

### பொன். கந்தையனார்

அவர்கள்

(ஓய்வுபெற்ற அதிபர், யா/வரணி மகாவித்தியாலயம் 1976 — 1983)

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர், பழைய மாணவர்கள், அபிவிருத்திச்சபை.

யா/ வரணி மகாவித்தியாலயம், வரணி.

(சி/3994)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யுத்தச் செய்தித் தடை:

# நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர ஐ. தே. க. முடிவு

கொழும்பு, ஜூன் 11

யுத்தம் தொடர்பான செய்திகளைப் பிரசுரிப்பதைத் தடை செய்வதன் மூலம் தேர்தலில் அரசுலாபம் பெற முனைந்தால், நாம் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவோம்.

மேற்கண்டவாறு ஐ.தே.க. நாடாளுமன்றக்குழு நேற்று முடிவு செய்துள்ளது.

ஐ. தே. க. நாடாளுமன்றக்குழு நேற்றுக்காலை கூடி அரசின் செய்தித்தணிக்கை தொடர்பாக ஆராய்ந்தது.

தெற்கில் நடக்கவிருக்கும் தேர்தலுக்கு அரசு செய்தித் தணிக்கையை பயன்படுத்த முனைவதாகத் தெரிகிறது. அப்படி அரசு செய்ய முனைந்தால் நாம் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவோம் —என்று அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(இ-1-3)

## மற்றொரு...

(முதலாம்பக்கத் தொடர்)

இவர் தனது பதவி விலகல் தொடர்பான கடிதத்தை யாழ். மாநகர ஆணையாளருக்கும், யாழ். தேர்தல் தெரிவு அத்தாட்சி அலுவலருக்கும் நேற்று அனுப்பி வைத்தார்.

இவர் தனது பதவி விலகல் கடிதத்தில் காலில் ஏற்பட்ட காயத்தினால் சில மாதங்களுக்கு தன்னால் நடமாட முடியாதெனவும், இதனாலேயேதான் தனது மாநகர உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

திருமதி ஜெனிட்டா இம்பீரியல், உதவி மேயர் த. திருநாவுக்கரசு, பிலிப் அந்தோனிப்பிள்ளை, சி. கௌரிசுதன் ஆகியோர் ஏற்கனவே தமது பதவிகளை இராஜினாமாச் செய்திருந்தனர்.

(இ-7)

## மலையகத்தில்...

(முதலாம் பக்கத்தொடர்)

லங்கா தோட்டச் சேவையாளர் சங்கம் உட்பட 14 தொழிற் சங்கங்கள் இதுவரை இம்முன்னணியில் இணைந்துள்ளன.

பிரதி அமைச்சர் பெ சந்திரசேகரம் தலைமையிலான மலையக மக்கள் முன்னணியையும் இந்தக் கூட்டு முன்னணியில் உள்ளடக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். ஆனால் எம். எஸ். செல்லச்சாமி தலைமையிலான இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் சேர்க்கப்பட மாட்டாது.

எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் இம் முன்னணி சார்பில் தான் வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்கள்.

முன்னணியின் தலைமைப் பதவி சுழற்சி அடிப்படையில் வருடாந்தம் வழங்கப்படும்— இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-21)

## ஒட்டமாவடி...

(முதலாம் பக்கத்தொடர்)

கையாளர் இல்லம் மீதுஇனந் தெரியாத நபர்களால் கைக்குண்டு வீசப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் பிரதமநம்பிக்கையாளரின் மனைவியும், மகளும் காயமடைந்தனர்.

(இ-21)

## சந்திப்பு ரத்து

யாழ்ப்பாணம், ஜூன் 11

கைது செய்து காணாமற் போனோர் சங்கம்காணாமற் போனவர்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் சோமசுந்தரம் வீதியில் அமைந்திருக்கும் மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் மனித உரிமை மீறல் அத்தியட்சகரை நாளை காலை 10.00 மணிக்கு சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி ரத்துச் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் படுகின்றது.

(இ-6)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்)

மகஜரில் தெரிவிக்கப்பட்ட மற்றும் சில முக்கிய கோரிக்கைகள் வருமாறு:-

★ இலங்கையுடனான உறவை மத்திய அரசு முற்றிலுமாக மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

★ கச்சதீவு தொடர்பாக இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

★ 1987 ஆம் ஆண்டு இந்திய – இலங்கை ஒப்பந்தப்படி இலங்கை அரசு வடக்கு —கிழக்கை இணைப்பதற்கு ஒப்புக் கொண்டதை செயற்படுத்துமாறுஇலங்கை அரசை வற்புறுத்த வேண்டும்.

★ இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ இலங்கையில் யுத்தம் நடைபெறும் வன்னியில் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை நேரில் பார்வையிட தமிழகத்தைச் சேர்ந்தசட்டமன்ற உறுப்பினர் குழு ஒன்றை அங்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(இ-3-6)

## செயல் இழப்பு

நெல்லியடி, ஜூன் 11

மந்திகை மருத்துவமனையில் பாவனையிலிருந்த தொலைபேசி கடந்த சில நாள்களாகச் செயல் இழந்து காணப்படுகிறது.

(இ-109)

## புதிய சந்தை திறப்பு

வடமராட்சி, ஜூன் 11

பருத்தித்துறை நகரசபையால் அமைக்கப்பட்ட புதிய மரக்கறிச் சந்தை சம்பிரதாயபூர்வமாக நேற்றுப் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வி.விஜயரட்ணத்தால்திறந்து வைக்கப்பட்டது.

இப்புதிய மரக்கறிச் சந்தை இன்று முதல் இயங்கும். பருத்தித்துறை பஸ் நிலையத்துக்கு அருகில் இச் சந்தை திறக்கப்பட்டுள்ளது.

(ஐ-173

## 5 அதிகாரிகள் ..

(முதலாம் பக்கத்தொடர்)

இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடிய 13 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பொது மன்னிப்புக் காலப்பகுதியில் மீண்டும் சேவைக்குத் திரும்பினார்கள். இவர்களுக்குபயிற்சி அளிக்கப்பட்டுமீண்டும் இவர்களைச் சேவையில் ஈடுபடுத்திய பின்னர் விடுதலைப் புலிகள் மீது இராணுவத்தினர் கடும் தாக்குதல்களை நடத்தக் கூடியதாக இருந்தது.

யுத்தச்செய்திகள் தொடர்பான தணிக்கையைக் கொண்டு வருவதற்குப் பல காரணங்கள் உண்டு.

இராணுவ நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் எதிரிக்குக் கிடைப்பதைத் தடுப்பது ஒரு காரணமாகும்.

பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் எதிரிக்குக் கிடைத்து வருவதன் காரணமாக யுத்தம் நீடித்துக் கொண்டு போகின்றது.

உத்தேச இராணுவ நடவடிக்கை ஒன்று பற்றிய தகவல்களை முதல் நாளே பத்திரிகையொன்று வெளியிட்டதன் காரணமாகப் பாதுகாப்புப் படையினர் இந்த நடவடிக்கையைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தச் செய்தியின் பாரதூரத் தன்மை பற்றி விளக்கிக் கூறப்பட்ட போது சம்பந்தப்பட்ட பத்திரிகையின் ஆசிரியர் அவரது தவலற ஏற்றுக் கொண்டார்.

இராணுவநடவடிக்கை பற்றிய தகவல்கள் எதிரிக்குக் கிடைப்பது தடுக்கப்பட வேண்டும் எனப் போர்முனையில் உள்ள படையினரும் கோரி வந்துள்ளனர்.

இராணுவ நடவடிக்கையின் போது அரசாங்கப் படையினருக்கு எற்படும் உயிரிழப்புக்கள் பற்றிய தகவல்கள் வெளியாவதைத் தடுப்பது இந்தத் தணிக்கை கொண்டு வரப்பட்டதன் மற்றுமொரு நோக்கமாகும்.

இத்தகைய தகவல்கள் படையினரின் பெற்றோர் மற்றும் உறவினர் மத்தியில் அநாவசிய அச்சத்தை ஏற்படுத்தும். குறுகிய காலத்துக்கு மாத்திரமே இந்த யுத்தச் செய்தித் தணிக்கை அமுலில் இருக்கும் என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றிக் கலந்துரையாடுவதற்காக அமைச்சர் இன்று செய்திப் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்திக்கவுள்ளார்.

(இ-3-6)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

என்ற விடுதலைப் புலிகளின் மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க சட்டமா அதிபர் ரினோவும், விடுதலைப் புலிகள் அமைப்பினரும் மேன் முறையிட்டு நீதிமன்றத்துக்கு செல்லவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

(இ-3)

## யுத்தச் செய்தி...,

(முதலாம் பக்கத் தொடர்)

திகாமடுல நாடாளுமன்ற உறுப்பினர் பி. தயாரத்தின பேசுகையில், விடுதலைப் புலிகள் தமது செய்திகளை "இன்ரநெட்" மூலம் உலகுக்கு பிரசாரம் செய்கிறார்கள். யுத்தச் செய்திகளை தடைசெய்வதன் மூலம் வீணான வதந்தியே பரப்பப்படுகின்றது. இந்நிலையை நீக்க யுத்த செய்திகள் மீதான தடையை அரசு நீக்க வேண்டும் என்றார்.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் மைக்கல் பெரேரா, மனோ செனவிரத்தின, காமினி ஜெயவிக்கிரம பெரேரா, சரத் குணவர்த்தன ஆகியோரும் யுத்தச் செய்திகள் மீதான தடையைக் கண்டித்து உரையாற்றினர்.

ஐ. தே. க. உறுப்பினர்கள் பேசும்போது அரச தரப்பு பிரதிநிதிகள் குறுக்கிட்டுப் பேச சபையில் அமளி துமளி ஏற்பட்டது.

(இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11 –06–1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# நாவற்குழி களஞ்சிய திருத்த வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

சேதமடைந்த நிலையிலுள்ள நாவற்குழி களஞ்சியத்தைப் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கூரை அமைப்பதற்கான இரும்புக் கேடர்கள் களஞ்சியத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனமும் வடபகுதி மீள் குடியேற்ற அதிகாரசபையும் இந்தக் களஞ்சியத்தை புனரமைப்பதற்கான நிதியுதவியை வழங்கவுள்ளன.

களஞ்சியத்தின் ஒரு பகுதியை திருத்தி அமைப்பதற்கு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் முன்வந்துள்ளது. மீதி வேலையைச் செய்வதற்கு உதவுமாறு யாழ். அரச அதிபரால் வடபகுதி மீள் குடியேற்ற அதிகாரசபை தலைவரிடம் கோரிக்கை விடுக்கப் பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட இச்சபையின் தலைவர் கே. ஓபடகே அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டபோது நாவற்குழி களஞ்சியத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ். மாவட்டத்திலே பெரிய உணவுக் களஞ்சியமான நாவற்குழி களஞ்சியம் புனரமைப்புச் செய்யப்பட்டபின் யாழ்ப்பாணத்துக்கு கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படும்பொருள்களை களஞ்சியப்படுத்தி வைக்க முடியும்.

இதனால் பொருள்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக கட்டட வசதியின்றி இருந்த நிலை மாற்றமடையும்.

தற்பொழுது களஞ்சிய வசதியின்றி வின்சர் தியேட்டர், மனோகரா தியேட்டர் மற்றும் கோண்டாவில் தனியார் கட்டடங்கள் ஆகியவற்றில் கொழும்பிலிருந்து கப்பலில் வரும் பொருள்கள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சியில்

# கசிப்பு உற்பத்தியாளர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்!

யாழ்ப்பாணம், ஜூன் 11

தென்மராட்சிப் பகுதியின் பல பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி அதிகரித்து வருவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தொண்டர் நிறுவனங்கள், சமூக அபிவிருத்திச் சங்கங்கள், பொதுமக்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் பற்றி எமக்குத் தகவல்கள் தந்துதவ வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி றோகான் சஞ்சீவ் ராஜூ கேட்டுக்கொண்டுள்ளார்.

சாவகச்சேரியில் எமது திணைக்களம் செயற்பட ஆரம்பித்த ஒரு குறுகிய காலத்துக்குள்ளேயே இவ்வாறான 23 வழக்குகள் எம்மால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் எவ்வளவு தூரம் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது என்பதனை அறிந்துகொள்ள முடியும்.

இந்தக் கசிப்பு நவீன முறைப்படியோ அல்லது சுத்தமான கருவிகள், பாத்திரங்களிலோ தயாரிக்கப்படுவது இல்லை. இதனால் மெதலோன் என்ற நச்சுப்பொருள் இந்தக் கசிப்பிலே காணப்படுகின்றது. எனவே இதனை அருந்துவோர் ஈரல் அரிப்பு, அல்சர், குடல்புண், அல்ககோல் ஹோமா போன்ற கொடிய நோய்களுக்கு உள்ளாக நேரிடும்,

இத்தகைய செய்கையினால் தற்போது உள்ள சமூகமும், எதிர்கால இளம் சமூகமும் சிதைந்துவிடக்கூடிய அபாயம் எழுந்துள்ளது.

இதனைத் தடுப்பதற்குச் சமூகத்திலுள்ள பலதரப்பினரும் இச்செயல்களில் ஈடுபடுவோர் பற்றிய தகவல்களை எமக்கு வழங்கிச் சமூகத்துக்குப் பயன்படக்கூடியவாறு செயற்பட வேண்டும்.

கண்டி வீதி, நுணாவிலில் உள்ள எமது அலுவலகத்துக்கு நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தகவல் தர முடியும்.

இப்படி அவர் கேட்டுள்ளார்.

(இ-9)

# வதிரியில் திருட்டு

நெல்லியடி, ஜூன் 11

வீட்டிலுள்ளோர் உறங்கிய சமயம் பார்த்து மாடி வீட்டின் வழியாக உட்புகுந்த திருடர்கள் அங்கு அலுமாரியிலிருந்த, சுமார் 65 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், இரண்டாயிரம் ரூபா பணத்தையும் திருடிக்கொண்டு தலைமறைவாகினர்.

இத்துணிகரமான திருட்டு கடந்த வெள்ளிக்கிழமை இரவு, வடமராட்சிப் பகுதியிலுள்ள வதிரியில் இடம்பெற்றது.

குழந்தைகளின் நான்கு சங்கிலிகள், மூன்று சோடிக் காப்புகள், இரு சோடி பெரிய காப்புகள் போன்றவையே திருடப்பட்டுள்ளன.

இதேவேளை திருடர்களின் கையில் அகப்பட்ட இரு தாலிக் கொடிகளும், ஓர் அட்டியலும் அவர்களினால் தவற விடப்பட்ட நிலையில் அப்பகுதியிலிருந்து மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இத்திருட்டுச் சம்பந்தமாக வீட்டின் உரிமையாளர் நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

(இ-109)

# பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 11

இலங்கைப் பல்கலைக்கழக சுதேச மருத்துவ வரலாற்றில் முதலாவது பேராசிரியராக உயர்நிலை பெற்ற சு. பவானியைப் பாராட்டும் விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த விழாவில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(இ-)

உடுவில் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதைப் பாராட்டி கந்தரோடை மக்கள் ஏற்பாடு செய்துள்ள பாராட்டுவிழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் சி. சிவசரவணபவன் (சிற்பி) தலைமையில் நடைபெறவிருக்கிறது.

(இ-3-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org